பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

# வலம்புரி

## Valampuri

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 25 | வியாழக்கிழமை | (11.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 266

# அகாஷியின் தலைமையில் நடைபெறும் நிதி உதவி மீளாய்வுக் கூட்டத்தில் புலிகள் பங்குபற்ற மாட்டார்கள்!

## யப்பான் தூதரகத்திற்கு கடிதம் அனுப்பி வைப்பு

(கிளிநொச்சி)

**யப்பான் தூதரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நாளை நடைபெறவுள்ள நிதி உதவி வழங்கும் மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என விடுதலைப் புலிகள் தீர்மானித்துள்ளனர்.**

**இத் தீர்மானம் தொடர்பான கடிதம் ஒன்றை யப்பானிய தூதரகத்திற்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.**

டோக்கியோ மாநாட்டின் மூலம் கிடைக்கப் பெற்ற நிதி உதவிகளை இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு எவ்வாறு செலவிடுவது என்பது தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்பில் உள்ள யப்பானியத் தூதரகம் நாளைய தினம் கொழும்பு 'ஹில்டன்' ஹோட்டலில் விஷேட மாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

யப்பானியத் தூதுவர் யசூசி அகாஷியின் தலைமையில் நடை (10ம் பக்கம் பார்க்க)

## நிதி மீளாய்வு மாநாடு திட்டமிட்டபடி நாளை நடக்கும்

(கொழும்பு)

டோக்கியோ உதவி வழங்கும் மகாநாட்டின் மீளாய்வு மகாநாடு திட்டமிட்டபடி நாளை நடைபெறும். விடுதலைப் புலிகள் சமுகமளிக்கா விட்டாலும் மகாநாடு நடைபெறும் என்று ஜப்பானியத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேற்படி மகாநாட்டிற்கு சமுகமளிப்பது பற்றிய தமது முடிவுகளை இதுவரை தெரிவிக்காதிருந்த விடுதலைப் புலிகள் தாம் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று இப்போது அறிவித்துள்ளதாக பேச்சாளர் மேலும் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் பங்குபற்றாவிடினும் கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இம் மாநாடு ஜப்பானின் விஷேட தூதுவர் யசூசி அகாஷி தலைமையில் நடைபெறும்.

(இ)

## பாசிக்குடாவில் பொலிஸாரின் புதிய முகாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாசிக்குடாவில் புதிய முகாமொன்றைப் பொலிஸார் அமைத்து வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து. அப் பிரதேச மக்கள் வாழைச்சேனைப் பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸாரின் இந் நடவடிக்கை போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலென்று, (10ம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் இளைஞர்கள் லண்டனில் அட்டகாசம்

### பலர் பொலிஸாரால் கைது

(லண்டன்)

லண்டனில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஈழத் தமிழ் இளைஞர்கள் பலர் ஸ்கொட்லண்ட் யாட் எனப்படும் பிரிட்டனின் குற்றவியல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழ் இளைஞர்கள் குழுக்களாகப் பிரிந்து கோஷ்டி மோதல்களிலும பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால் லண்டன் பொலிஸார் பெரும் நெருக்கடிகளுக்குள்ளாகியுளளனர். தமிழ் இளைஞர்களின் குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்துவதற்கென தனி அதிரடிப் பொலிஸ் பிரிவை பொலிஸார் உருவாக்கியுள்ளனர்.

தமிழ் இளைஞர்கள் கொலை அடிதடி (10ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் மீண்டும் போரா! அல்லது அபிவிருத்தியுடன் கூடிய சமாதானமா?

### மக்களை முடிவு செய்யுமாறு கேட்கிறார் அமைச்சர் பீரிஸ்



(கொழும்பு)

நிலையான சமாதானத்தை ஏற்படுத்த மக்களை அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கேட்டுள்ளார். இதன் மூலமே நாட்டில் அபிவிருத்தியை, வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும். பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்பட ஒரு குழுவினர் உள்ளனர். அவர்கள் சமாதான ஒப்பந்தங்களை முறியடிப்பதற்கும் நோர்வே அனுசரணையாளர்களை, கண்காணிப்புக்குழுவின்ரை நாட்டை விட்டு வெளியேற்றவும் முயற்சிக்கின்றார்கள். அபிவிருத்தி முயற்சிகளை சீர்குலைப்பதற்கு குறுகிய அரசியல் நோக்கங்களுடன் செயற்படுகின்றார்கள் மறை முகமாகப் போரைத் தூண்டி விடுகின்றார்கள்.நான் மக்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். (10ம் பக்கம் பார்க்க)

## 2004 முதல் பாடசாலைகளில் தமிழீழ வரலாறு போதிக்கப்படும்

### தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிவிப்பு

(திருநெல்வேலி)

2004-ம் ஆண்டு தொடக்கம் யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் தமிழீழ வரலாற்றையும் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப் போவதாக தமிழீழக் கல்விப் மேம்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது.

கல்வித் திட்டத்தின் மூலமாக தமிழ் மாணவர்கள் மத்தியில் உண்மைக்குப் புறம்பாக சிங்கள வரலாற்றைத் திணிக்க இனவாத அரசுகள் தொடர்ந்தும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் தமிழீழ வரலாற்றைப் பாதுகாக்கவும், உண்மைக்குப் புறம்பாக, இனவாத அரசுகள் கல்வித் திட்டங்களினூடாக மேற்கொண்டுவரும் வரலாற்றுத் திரிபுகளை அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பு எமது கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிங்கள அரசுகளின் இத்தகைய சூழ்ச்சிகளை எதிர் கொள்வதற்கு மாணவர்கள் மத்தியில் உண்மையான வரலாறுகளைப் பாடமாகப் (10ம் பக்கம் பார்க்க)



## டென்மார்க் தூதுவர் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான டென்மார்க் தூதுவர் மைக்கல் ஸ்ரன்பேர்க் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை இப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 கண்டி வீதி வழியாக கிளிநொச்சிக்குச் சென்ற டென்மார்க் தூதுவர் மைக்கல் ஸ்ரன்பேர்க்கை முகமாலைச் சோதனைச் சாவடியில் விடுதலைப் புலி உறுப்பினர்கள், தமிழீழ காவல் துறையின் வாகன அணியினர் வரவேற்று கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்றனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தைகளின் போது தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி (10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறப்புத் தூதுவர் அகாஷி இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

யப்பானின் இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் யசுஷி அகாஷி 6நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார்.

இலங்கை வரும் இவர், டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டு நிதியை பங்கிடுவது தொடர்பாக ஆராயும் மாநாடு ஒன்றை கொழும்பில் நடத்தவுள்ளார்.

மேலும் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் அரசியல் தலைவர்களுடனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கிமுடனும், கிழக்கு மாகாண நிலைகள் உட்பட பலவேறு விடயங்கள் குறித்து ஆராயவுள்ளார்.


அத்துடன், கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனையும் சந்திக்கவுள்ளார்.


கொழும்பில் ஜனாதிபதி சந்திரிக்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்திப்பதுடன், அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொடவையும் எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இவ்வரசியல் தலைவர்களின் சந்திப்பின் பின்னர், எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பில் விஷேட ஊடகவியலாளர் மாநாடு ஒன்றையும் நடத்தவுள்ளார்.

(தி)

## இனி அம்மையாரின் பாடு திண்டாட்டமோ...?











## குளம் புனரமைப்பு

(மருதங்கேணி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம், கிளிநொச்சி கோணாவில் கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள யூனியன் குளத்தைப் புனரமைக்கவுள்ளதுடன் கலைவாணி முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைத்து வருகின்றது. (உ-35)

## டெங்கு நோய் ஒழிப்புத் திட்டம்

(சுதுமலை)

வலி தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள ஆனைக்கோட்டை கூழாவடிப் பகுதியில் டெங்கு ஒழிப்புத் தொடர்பான நடவடிக்கைகள் கடந்தவாரம் மேற்கொள்ளப்பட்டன.

டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இருவர் கடந்த மாதம் இப்பகுதியில் இனம் காணப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, இந்நோயை மேலும் பரவ விடாது தடுக்கும் நோக்கில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந் நடவடிக்கையை மேற்கொண்டனர். (உ-252)

## பேருந்து விபத்தில் 7பேர் பலி

(வெலிமடை)

வெலிமடை நகரில் இருந்து வர்விக் தோட்டத்திற்குச் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்து புரண்டதில் அதில் பயணித்த 7பேர் பலியாகியுள்ளனர்.

30பேர் படுகாயமடைந்த நிலையில் வெலிமடை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றுள்ளது. (உ)

## துயிலும் இல்லம் புனரமைப்பு

(கொடிகாமம்)

கடந்கால யுத்தம் காரணமாக அழிவுற்றிருக்கும் கொடிகாமம்-பருத்தித்துறை வீதியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லம் தற்போது புனரமைக்கப் பட்டு வருகிறது.

நவம்பர் மாதம் கொண்டாடப் படவுள்ள மாவீரர் தினத்தையொட்டியே தற்போது புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-87)

## மாபெரும் வர்த்தகக் கண்காட்சி


(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில், வர்த்தகம் மற்றும் கைத்தொழில் கண்காட்சியொன்று பெருமெடுப்பில் இம்மாதம் இறுதியில் யாழ்.நகரில் நடாத்தப்படவுள்ளது.


மேற்படிக் கண்காட்சியில் இலவச காட்சியறைகளை அமைக்கவிருக்கும் வர்த்தகர்கள் மற்றும் கைத்தொழிலாளர்ளை யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் கேட்டுள்ளார். (உ-4)


யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் நேற்று நடைபெற்ற பாரதி விழாவில் பேராயர் சு.ஜெபநேசன் பாரதியாரின திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிப்பதையும், தென் கிழக்கு பல்கலைக் கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசியர் சி.மௌனகுரு உரையாற்றுவதையும், விழாவுக்கு வருகை தந்த ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

படம்:- ஜெ. ஜெறாட்









மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்ற போது பூர்வாங்கக் கிரியைகளில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொண்டார். இந் நிகழ்வின் போது ஆலய அறங்காவலர் திரு.பொ.வி.திருநாவுக்கரசு அமைச்சர் மகேஸ்வரனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், அமைச்சர் ஆலய அறங்காவலருடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

படங்கள் :- பவன்

### முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களை

# சமாதான விரோதிகளாகச் சித்திரிக்கும் முயற்சிகள் முனைப்புப் பெற்றுள்ளன

## கொழும்பு பல்கலையின் அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அனீஸ் ஆதங்கம்

(கொழும்பு)

முஸ்லிம்களைச் சமாதானத்தின் விரோதிகளாகச் சித்திரிக்கும் முயற்சிகள் பல்வேறு மட்டங்களிலும் இடம்



பெற்று வரும் இவ் வேளையில் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் சர்வதேச வலையமைப்புகளின் பெயர்களில் இயங்கி வருவதாகத் தற்போது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. வெறும் ஊகங் களினதும் கற்பனைகளினதும் ஒரு வடிவமாகும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கோ அன்றி அவர்களுக்குக் கிடைக்கவுள்ள நியாயபூர்வமான தீர்வுகளுக்கோ எதிராக முஸ்லிம்கள் ஒருபோதும் செயற்படவில்லை. இதே நிலைதான், இனிவரும் காலங்களிலும் இருக்கும். இது விடயம் தொடர்பாக தமிழ்மக்கள எதுவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை.

கொழும்பு பல்கலைக்கழகத்தின அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ். அனீஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் உண்மையில் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் இருப்பதற்கான எந்தவித ஆதாரங்களும் இதுவரையில்லை. கிழக்கு முஸ்லிம்கள் எந்தவொரு இனத்திற்கும் எதிரான இனவாத நவடிக்கைகளில் ஈடுபடுவதும் இல்லை. இது இல்வாறு இருக்க கிழக்கில் முஸ்லிம ஆயுதக்குழு என்று சில விஷம ஊடகங்கள் தகவல் வெளியிடுவதில எவ்வித உண்மையும் இல்லை.

அதேவேளை சமாதான முயற்சிகளைக் குலைக்கும் ஒரு நடவடிக்கையாகவே கிழக்கில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற வன்செயல்கள் அமைகின்றன. தற்போது அடிக்கடி கிழக்கில் இடம் பெற்றுவரும் முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் இதையே உணர்த்துகின்றன.

ஆனால், வட-கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பாக புலிகள் முன் வைத்த கருத்துக்கள் சில எம்மை ஆறுதலடையச் செய்திருந்தாலும் கிழக்கில் இடம்பெற்றுவரும் வன செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தும் கடமையை அவர்கள் செய்ய வில்லை.

இதுவிடயம் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பதற்குரிய தார்மீகப் பொறுப்பு புலிகள் இயக்கத்திற்கு இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக செயற்படுபவர்களை இனம்கண்டு அவர்கள் யாராக இருப்பினும் சட்டப்படி அவர்களை விடுதலைப்புலிகள் தண்டிக்கவேண்டும் இவ்வாறு அவர்கள் செய்வார்களாயின் முஸ்லிம்களின் உள்ளங்களை விடுதலைப்புலிகள் வெற்றிகொள்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

ஒரு நாட்டை ஆளும் அரசின் தலையாய கடமை குடிமக்களை பாதுகாப்பதே. ஆனால், கிழக்கு முஸ்லிம்கள் விடயத்தில் அரசு எதுவித கவனமும் எடுக்கவில்லை. அரசின் இவ்வாறான செயற்பாடு இனங்களுக்கிடையே முரண்பாடுகள் வலுவடைவதற்கு முக்கிய காரணமாக அமைகிறது.

அதேவேளை, சமாதான முயற்சிகளுக்கு ஆரோக்கியமான முறையில் தமது பங்களிப்பை வழங்க முஸ்லிம் தலைமைத்துவங்கள் முன வரவேண்டும். தமிழ்-முஸ்லிம் உறவை வளர்த்தெடுக்க இவர்கள் இனிமேலாவது ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-18)

## கொழும்பு மாநகரசபை உறுப்பினரிடையே மோதல்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலின் போது சபையின் தளபாடங்களும், தொடர்பு சாதனங்களும் சேதமாக்கப்பட்டன.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொழும்பு மத்திய தொகுதியிலும் கிரான் பாஸ் கட்டடத்தொகுதியிலும் இடம்பெற்ற சட்டவிரோத நிர்மாணப்பணிகள் குறித்து எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியபோது இம்மோதல் ஆரம்பித்தது.

இம மோதல் சம்பவத்தில் உறுபபினர்கள் பலத்த கோஷங்களை எழுப்பிக்கொண்டு, சபைக்குச் சொந்தமான தளபாடங்களையும் தொலைத்தொடர்பு சாதனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

பிரதிமேயர் அசாபசாலி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தை கட்டுப்பாட்டில் கொண்டுவர எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்தமையால் இறுதியில் கூட்டம் நடைபெறவில்லை. (தி)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நியமனத்தில் பல்வேறு சிக்கல்கள்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு தெவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இம் மாகாணங்களில் நிலவிவந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, அண்மையில் 3ஆயிரம் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டது.

இதற்கமைய தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கும் பட்டதாரிகள் ஆயிரம் பேருக்கும் தகுதிகாண் ஆசிரியர் ஆயிரம் பேருக்குமே நிரந்தர நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

வடக்க-கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் இந்தத் தெரிவுக்குள் உள்ளடக்கி இருக்கவேண்டும்.

எனினும், புதிதாக நியமனம் வழங்கும் நிலையில் கல்வி அமைச்சு தற்போது இல்லை.

இதற்கிடையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கும். பிரதமர் ரணில விக்கிரமசிங்காவுக்கும் இடையில கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட சந்திப்பின் போது, பகுதி நேர் ஆங்கில ஆசிரியர்களின் நியமனம் குறித்து பிரதமர் ரணில் கொள்கை அளவில் இணங்கி இருநதமை குறிப்பிடத்தக்கது. (தி)

## தேர்தல்முறை மாற்றம்குறித்து மக்கள் கருத்தறியும் பணி

(யாழ்ப்பாணம்)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவினர், இம் முறை மக்கள் தொடர்பான கருத்துக்களை அறியும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல்வேறு மாவட்டங்களுக்கும் நேரில்சென்று மக்களின் அபிப்பிராயங்களை பெற்றுக்கொள்ளும் இந் நடவடிக்கை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து இருமாதங்கள்வரை இப்பணி இடம்பெறுவுள்ளது.

இதன்படி வடக்கு-கிழக்கு மற்றும் அனுராதபுரம், மாத்தறை, நுவரெலியா ஆகிய பல பிரதேசங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களின் கருத்துக்களை அறியவுள்ளதாக இக்குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(உ-08)

## வைத்தியசாலைகளில் 24ஆயிரம் தாதியர்க்குப் பற்றாக்குறை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் சுமார் 24ஆயிரம் தாதியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

இவ்வாறு பொது வைத்தியர் தாதியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ அறிக்கையில், இதன் காரணமாக இடமாற்றம் செய்யப் பட்ட ஆயிரம் தாதியர்கள் இடமாற்றம் செய்யப் பட்டஇடத்தில் கடமையாற்ற முடியாதநிலை ஏற்பட்டுள்ளது என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடன் நேற்று முன்தினம் விசேட பேச்சு வார்த்தைஒன்று இடம்பெற்றுள்ளது. (தி)

## வடக்கு-கிழக்கு பகுதியிலும் இணக்க சபைகள் அமையும்

(கொழும்பு)

நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் இணக்க சபைகளை வட-கிழக்கிலும் அமைப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இணக்க சபைகளின் தலைமையகச் செயலாளர் பள்ளே கெதர தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றிக் கருத்துக் கூறுகையில், வட-கிழக்கு மாகாணங்களிலுள்ள 4மாவட்டங்களைத தவிர, நாடுமுழுவதும் உள்ள 20மாவட்டங்கள் தோறும் இதுவரை 252 இணக்க சபைகள் உருவாக்கப்பட்டு மக்களுக்குத் தமது அயராத சேவையை வழங்கி வருகின்றன.

அந்த வகையில், இவ் இணக்க சபைகள் மூலம் இதுவரை சுமார் 6லட்சத்து 22ஆயிரத்து 615பொது மக்களது பிணக்குகள் தீர்வு காணப்பட்டுள்ளன. மேற்படி 20மாவட்டங்களிலும் இவ் இணக்க சபைகள் மூலம் சுமுகமான முறையில பிணக்குகளுக்கு சரியான தீர்வுகள் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தற்போது வடகிழக்கிலும் இணக்க சபைகள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (தி-18)

### தமிழ்நாட்டில் இருந்து

## 53 மீன் பிடிப் படகுகள் நேற்று வந்துசேர்ந்தன

(கொழும்பு)

தமிழ்நாடு நாகபட்டினம் துறைமுகத்தில் கடந்த 13வருடங்களாக தடுததுவைக்கப்பட்ட திருமலை மீனவர்களின் 53மீன்பிடிப் படகுகளும் நேற்றுக் காலை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தன.

நாகபட்டினம் துறைமுகத்தில் இருந்து இந்தியக் கடற்படையினரின் இழுவைப்படகுகளின் துணையுடன் கொண்டுவரப்பட் இப்படகுகளை இந்தியக் கடற்படையினர், இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது அங் கிருந் து அகதிகளாகச் சென்றோர் கொண்டுசென்ற மீன் பிடிப் படகுகளே நாகபட்டினத்தில் தடுத்து வைக்கப்பட்டன.

(தி)

## 122 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் 122பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அமைச்சரவையினதும், திறை சேரியினதும் அங்கிகாரம் கிடைத்துள்ளது.

பெருந்தோட்டப் பாடசாலைகளின் உயரியல் பிரிவுக்கு 17 பேரும், வர்த்தகப் பிரிவுக்கு 14 பேரும், கலைப் பிரிவுக்கு 8 பேரும், சங்கீதத்திற்கு 9பேரும், நடனத்திற்கு 12 பேரும், பௌதிக விஞ்ஞானத்துறைக்கு 12 பேருமாக மொத்தம் 72 பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இது தவிர நகர்ப்புற பாடசாலைகளுக்கும், தேசியப் பாடசாலைகளுக்கும் மேலும் 50பேரை நியமிக்க அங்கீகாரம் கிடைத்துள்ளதாகத் மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (தி)

### துக்க தினம்

(கொழும்பு)

எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமையை அரசாங்கம் தேசிய துக்க தினமாக பிரகடனம் செய்யவுள்ளது.

ஐக்கிய மகாபண்டித அதிசங்கைக்குரிய மடிக்கே பஞ்ஞாசிக மகா நாயக்க தேரரின் இறுதிக் கிரியைகள் அன்று நடைபெற இருப்பதனாலேயே தேசிய துக்க தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (தி)

# 146 நாடுகளின் உலக வர்த்தக மகாநாடு மெக்சிக்கோவில் நேற்று ஆரம்பம்

## உலகமயமாக்கலுக்கு எதிரானவர்கள் நிர்வாணமாக நின்று ஆர்ப்பாட்டம்

(மெக்சிக்கோ)

**146 நாடுகள் பங்குகொள்ளும் உலக வர்த்தக மகாநாடு நேற்று மெக்சிக்கோவில் ஆரம்பமாயிற்று .இந்த மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உலக மயமாக்கலுக்கு எதிரான இயக்கத்தினர் சுமார் 25பேர் மெக்சிக்கோ கடற்கரையில் நிர்வாண ஆர்ப்பாட்டம் நடத்தினர்.**

146 நாடுகளைச் சேர்ந்த 4ஆயிரத்து 700 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்குபெறுகின்றனர்.

இதற்கிடையில் உலகின் அரைப் பங்கு சனத்தொகையைக் கொண்ட அபிவிருத்தி அடையும் நாடுகள், செல்வந்த நாடுகளிலுள்ள விவசாய பண்ணையாளருக்கு அந்த நாடுகள் வழங்கும் பெருமளவிலான மானியங்கள் கிடைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

விவசாயப் பண்ணையாளருக்கு 30ஆயிரம் கோடி டொலர் ஒரு வருடத்தில் மானியமாக வழங்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஆஜன்டீனா, தென்னாபிரிக்கா, இந்தியா, பிறேஸில் உட்பட அபிவிருத்தியடையும் நாடுகள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளன.

உலக சனத்தொகையில் 51சதவீதமான பங்கையும், உலக விவசாயிகளின் மூன்றிலொரு எண்ணிக்கையோரையும் இந்த நாடுகள் கொண்டுள்ளமை முக்கிய அம்சமாகும்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட உலக வர்த்தக ஸ்தாபனத்தின் மாநாட்டுக்கு எதிர்ப்புக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்திற்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் நகரத்தின் எல்லைப்புறத்தில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். அவர்களை உள்ளே அனுமதிக்காது பொலிஸார் வீதித்தடைகளை அமைத்திருந்தார்கள்.

இதனைத் தவிர மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் 10ஆயிரத்திற்கும் அதிகமான மெக்சிக்கோ விவசாயிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக மயமாக்குதலுக்கு எதிரான இயக்கங்களை சேர்ந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் 25பேர் மெக்சிக்கோ கடற்கரையில் ஆடைகளை களைந்துவிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

உலக வர்த்தக ஸ்தாபனத்தின் மகாநாடு நடந்து கொண்டிருந்த இடத்திற்கு சிறிது தூரத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

உலகின் ஏழை நாடுகள் இந்த ஸ்தாபனத்தின் மூலம் எதுவித பயனும் அடையவில்லை பெரிய கொம்பனிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்குமாக மட்டுமே உலக வர்த்தகஸ்தாபனம், சர்வதேச நிதிநிறுவனம், உலகவங்கி முதலியவை பணியாற்று கின்றன என்று ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் தெரிவித்தார். (பி-09,60)

## லிபியா மீதான தடையை நீக்கும் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க பிரான்ஸ் நிபந்தனை

(நியுயோாக)

லிபியா மீதான தடைகளை நீக்குவதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் நடத்தப்பட விருந்த வாக்களிப்பு வெள்ளிக் கிழமை வரை பின்போடப்பட்டுள் ளது.

1989ஆம் ஆண்டு பிரான்ஸ்ஸுக்குச் சொந்தமான விமானம் ஒன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நியாயமான நட்டஈடுகளை லிபியா வழங்கினால் மட்டுமே அந்தநாட்டின் மீதான தடைகளை நீக்க வேண்டும் என்று பாதுகாப்புப் பேரவையை பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது.

லிபியா மீதான தடைகளை நீக்குவதற்கு பாதுகாப்புப் பேரவையின் ஏகோவித்த ஆதரவை பெறும் பொருட்டு வாக்களிப்பு நடத்தத் திட்டமிட்டால் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை தடுத்து நிறுத்தப் போவதாக பிரான்ஸ் கூறியிருந்தது.

இதனையடுத்து பாதுகாப்புப் பேரவையின் நடப்புத் தலைமைப் பதவியை வகிக்கும் பிரிட்டன் வாக்களிபபை வெள்ளிக்கிழமை வரை ஒத்தி வைத்திருப்பதாக அறிவித்துள்ளது . (பி-9)

## செப்டம்பர் தாக்குதல் போன்று அமெரிக்கா மீது மீண்டும் ஒரு தாக்குதல் நடத்த அல்கெய்டா திட்டம்

### இஸ்ரேலிய இராணுவ தளபதி தகவல்

(ஜெருசலேம்)

அமெரிக்காமீது 2001ஆம் ஆண்டு செப்ரம்பர் 11ஆம்திகதி நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களைப் போன்று மீண்டும் ஒரு தாக்குதலை நடத்த அல்கெய்டா இயக்கம் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியா விமானி ஒருவரைப் பயன்படுத்தி இத்தாக்குதல்களை நடத்துவதற்கு அல்கெய்டா இயக்கம் திட்டமிட்டிருப்பது தெரியவந்துள்ளதாக லெப்ரினன் ஜெனரல் மொஷையாலன் கூறியுள்ளார்.

இதேவேளை தமது நாட்டுடன் ராஜதந்திர உறவுகளைக் கொண்டிராத சவூதியரேபியா இஸ்ரேலின் தென்புற எல்லைக்கு அருகேயுள்ள தாபுக் இராணுவத்தளத்தில் எவ்.16 ரக போர்விமானங்களை நிறுத்தி வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போர் விமானத்தை அல்லது பயணிகள் விமானம் ஒன்றைப் பயன் படுத்தி தற்கொலை விமானத்தாக்குல்களை நடத்த அல்கெய்டா இயக்கம் திட்டமிட்டுள்ளமை தொடர்பாக தகவல்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள அல்கெய்டா இயக்க உறுப்பினர்கள் மூலம் வெளிவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (பி-9)

## அமெரிக்க துணை அமைச்சர் புதுடில்லியில் ஆலோசனை

(புதுடில்லி)

அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சர் திருமதி கிரிஸ்ரினா ரொக்கா இந்திய வெளியுறவுச் செயலர் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்தினார். ஈராக்கிற்கு அமைதிப் படைவீரர்களை அனுப்புமாறு இந்தியாவை வற்புறுத்தும் வாஷிங்டனின் ஒரு முயற்சியாக அவர் நேற்று முன்தினம் இரவு புதுடில்லி வந்து சேர்ந்தார்.

இன்று திருமதி கிறிஸ்தினா றொக்கா பிரதமமந்திரி அடல்பிஹாறி வாஜ்பாயைச் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

படைவீரர்களை அனுப்பும் விஷயம் குறித்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ டபிள்யூ புஷ் சில நாட்களுக்கு முன் பிரதம மந்திரி வாஜ்பாயிடம் தொலை பேசியில் உரையாடினார்.

பன்னாட்டு அமைதிப் படைகளை அனுப்புவதற்கு அங்கீகாரம் நாடும் தீர்மானம் ஒன்றை அமெரிக்கா ஐ.நா பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்திருக்கிறது.

இந்தகைய பன்னாட்டுப் படைக்கு ஐ.நா. வெளிப்படையான அங்கீகாரம் அளித்தால்தான் அமைதிப்படை வீரர்களை அனுப்பமுடியும் என்று இந்தியா தெளிவுபட தெரிவித்திருக்கிறது. (பி-9)

## இஸ்ரேலியர் 13பேரை பலிகொண்ட ஹமாஸ் தற்கொலை தாக்குதல்

(ரெல்அவிவ்)

பலஸ்தீன தற்கொலைப் போராளிகள் இஸ்ரேலில் நடத்திய 2தாக்குதல்களில் 13பேர் கொல்லப்பட்டுள்ளதோடு பலர் காயமடைந்துளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரெல்அவிவிற்கு தென்கிழக்காக அமைந்துள்ள ரிவ்வின் இராணுவத் தளத்தின் வாயிலில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 7பேர் கொல்லப்பட்டார்கள்.

இந்த சம்பவம் நிகழ்ந்த சில மணி நேரங்களில் ஜெருசலேம் உணவு விடுதியில் நடத்தப்பட்ட மற்றுமொரு தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் 6பேர் கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்துள்ளார்கள்.

இந்த 2சம்பவங்களுக்கும் தாம் பொறுப்பு என்று ஹமாஸ் போராளிக்குழு கூறியுள்ளது.

இதேவேளை இந்த சம்பவங்களை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் பலஸ்தீனத்தின் பிரதமர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டுள்ள அஹமட் ஹுஏரயும் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துளளார்கள். (பி-9)

## பிரஞ்சு உடைமைகள் அரசுடமையாக்கப்படும்

### லிபியா எச்சரிக்கை

(த்ரிபோலி)

லிபியாவில் உள்ள பிரான்ஸ் நிறுவனங்களுக்குச் சொந்தமான எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் அரசுடமையாக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு பிரான்ஸ் விமானம் ஒன்று குண்டுவைத்துத் தாக்கியமை தொடர்பாக லிபியா வழங்க முன்வந்துள்ள நஷ்ட ஈட்டுத் தொகையை பிரான்ஸ் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று லிபிய அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு ஏற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் லிபியாவில் உள்ள பிரான்ஸ்செ நிறுவனங்களுக்குச் சொந்தமான எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களை அரசாங்கம் சுவீகரிக்க நேரிடும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் புறம்பாக பிரான்ஸ் உடனான பொருளாதாரத் தொடர்புகளையும் துண்டித்துக் கொள்ளப் போவதாக லிபியா மேலும் எச்சரித்துள்ளது. (பி-9)

## பங்களாதேஷில் குண்டு வெடிப்பு எதிர்க்கட்சித் தலைவர் பலி

### 10 பேருக்கு மேற்பட்டோர் காயம்

(டாக்கா)

சில தினங்களுக்கு முன் பங்களாதேஷில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

தெற்குப்பகுதி குல்னா நகரில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 10பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சியான அவாமி லீக்கட்சியின் தலைவர் ஹமருல் இஸ்லாம் ஹுத்து என்பவரே இவ்வாறு குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை இந்தக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான மஞ்ஷுனுள் இஸ்லாம் கடந்த மாதம் 25ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொலைகளுக்கு ஆளும் பங்களாதேஷ் தேசிய கட்சி பொறுப்பு என அவாமிலீக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

எனினும் ஆளும்கட்சி அதனை மறுத்துள்ளது. (பி-9)

## 42இந்திய மீனவர்களை பாகிஸ்தான் விடுவித்தது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் 42இந்திய மீனவர்களை நேற்றுமுன்தினம் விடுவித்ததோடு இந்தியாவுடனான நல்லுறவின் வெளிப்பாடாக மேலும் 32 மீனவர்கள் விடுதலை செய்யபடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிய கடற்பகுதி எல்லைகளுள் நுழைந்து சட்டத்திற்கு புறம்பாக மீன்பிடித்ததற்காக இந்த இந்திய மீனவர்கள் கராச்சிச் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததாக அதிகார பூர்வவட்டாரங்கள் தெரிவித்தன.

விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் தங்களது 18 படகுகளையும் சரி செய்து கொண்டிருப்பதாகவும், சரி செய்த பின்னர் இந்தியா திரும்ப அனுமதிக்கப்படுவார்கள் என்றும் செய்திகள் தெரிவிததுள்ள்ன. (பி-9)

## ஆண்டு நிறைவும் பாரதி விழாவும்

(கொழும்புத்துறை)

இருபாலை கிழக்கில் உள்ள பாரதி காலாமன்றத்தின் 40வது ஆண்டு நிறைவும் பாரதி விழாவும் இன்று பி.ப.3.30 மணிக்கு மேற்படி மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தாயகம் கலை இலக்கிய சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழீழ விடுதலைப் புலிகள் கலைப்பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, புதியபூமி பொறுப்பாசிரியர் சி.கா.செந்தில்வேல் ஆகியோர் 'பண்பாட்டின் வேராக பாரதி..' என்ற தலைப்பில் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து கவிஞர் முருகையன் தலைமையில் ''பண்பாடு உயர்ந்திடப்பாடு'' என்ற தலைப்பில் கவிஞர் சோ. பத்மநாாதன், வே. குமாரசாமி, அ.பகீரதன், சோ. தேவராஜா ஆகியோர் கவிதைகளை நிகழ்த்தவுள்ளனர். (தி-10)

## அடிக்கல் நாட்டல்

(மருதங்கேணி)

புளியம்பொக்கணை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான அடிக்கல் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகத்தினால் அண்மையில் நாட்டிவைக்கப்பட்டது. (க-35)

## 99 வயது தாத்தாவை பேரன் கொன்றான்

(வெள்ளாவ)

99 வயதான தாத்தாவை அவரது 21 வயது பேரன் கொலை செய்திருப்பதாக வெள்ளாவ பாதுவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

என்திரிக்சிங்கோ என்ற 99 வயதான முதியவரை அவரது 21 வயது நளின் குணதிலக என்ற பேரன் கொலை செய்தார் என்று புகார் செய்யப்பட்டுள்ளது. இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் என்று கூறப்படும் இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொலைக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.(பி)

### மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா

## குடாநாட்டு இராணுவத் தளபதி பொறுப்பை மீண்டும் ஏற்றார்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் முதல் மீண்டும் தனது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர், கடந்த யூலை மாதப் பிற்பகுதியில் வெளிநாடு சென்றிந்த கார்ரணத்தினால், இவரது இடத்திற்கு யாழ். மாவட்ட இராணுவ தளபதி பாரமி குலதுங்க பணியாற்றி வந்தார்.

கடந்த 4 ஆம் திகதி மீண்டும் நாடு திரும்பியதையடுத்து யாழ்.குடாநாட்டு இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் முதல் தனது பதவியை மீளப்பொறுப்பேற்றுள்ளார். (உ-10)

## கல்வி அமைச்சுக்கு எதிராக நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

தங்காலை விழிப்புலன், செவிப்புலன் அற்ற பாடசாலை மாணவர்களால் கல்வி அமைச்சுக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு தமக்குக் கிடைக்க வேண்டிய பிறேல் கையேடுகள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை எனக் கோரியே இம் மனு தாக்கல் செய்யபட்டுள்ளது.

இதனால் தங்களது கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

### திவுலப்பிட்டி பிரதேச உறுப்பினர்கள்

## 8 பேர் பதவி விலகப் போவதாக ஜனாதிபதிக்கு அறிவிப்பு

(கொழும்பு)

திவுலப்பிட்டி பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பொது ஜன ஐக்கிய முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர்கள் எட்டு பேரும் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக எழுத்து மூல அறிவிப்பு ஒன்றையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

திவுலப்பிட்டி தொகுதியின் பொ.ஐ.மு. அமைப்பாளராக சந்தன ஜெயக்கொடியை நியமித்தமைக்கு ஆட்சேபனை தெரிவித்தே உறுப்பினர் இவ் அறிவித்தலை விடுத்துள்ளனர்.

இத் தொகுதியின் அமைப்பாளராக சத்தாதிஸ்ஸ சகலசூரிய நீண்டகாலமாக பணியாற்றி வருவதுடன். மேல் மாகாண சபை முதல்வராகவும் பதவி வகிக்கின்றார்.

ஆனால், எவருடனும் கலந்துரையாடப்படாமல் புதிய அமைப்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்தத் தீர்மானம் பொ.ஐ.மு. நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## கசிப்பு விற்றவர் கைது

(கொடிகாமம்)

அண்மையில் கொடிகாமம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தீவிர கசிப்பு வேட்டையில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்றுவந்த நபரொருவர் கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளார்.

தற்போது மேற்படி நபர் பொலிஸாரால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (உ-37)

## ஊரின் நற் பெயருக்கு களங்கம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கில் இளம் யுவதி மீது அங்கசேஷ்டை புரிந்த இளைஞரை அப்பகுதி இளைஞர்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர்.

இதேவேளை, மேற்படி பகுதியில் இத்தகைய இளைஞர்களின் அட்டகாசம் நாளாந்தம் நடைபெற்று வருவதாகவும் இது குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் வேறிடத்தில் இருந்து வரும் இளைஞர்களே என்றும் இத்தகைய செயல்கள் தமது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு செய்யப்படுகிறது என்றும் அப்பகுதி இளைஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-51)

## நிதி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கம் பாடசாலையில் சேதமடைந்த விடுதியை புனரமைக்கவும், நீரிறைக்கும் யந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்யவுமென 2 லட்சத்து 41 ஆயிரத்து 240 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது. (உ-16)

## அறிவுறுத்தல் கூட்டம்

(சுதுமலை)

சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் கடமை புரியும் சுகாதார தொண்டர்களிற்கு தேசிய போலியோ தினம் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20-ம் திகதி முதலாம் கட்ட போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வு தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் சுகாதார செயற்பாடுக்ள் தொடர்பாக மேற்படி கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் எனவே பதிவு செய்யப்பட்ட சகல தொண்டர்களையும் தவறாது சமுகம் தருமாறும் வைத்திய அதிகாரி மேலும் கேட்டுள்ளார். (உ-252)

## சென்னையில் பயிற்சி பெற்று திரும்பினர்

(மருதங்கேணி)

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலாளர்கள் சென்னையில் 10 நாட்கள் பயிற்சி பெற்று அண்மையில் நாடு திரும்பினர்.

இப் பயிற்சி வகுப்பில் முகாமைத்துவம், நிர்வாகம், சமூகப்பணி போன்ற முக்கிய விடயங்கள் சார்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (பி-35)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் உலகளாவிய இரத்ததான தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள எதிர்வரும் 14 ஆம் திக்தி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணிக்கு யாழ்.சத்திய சாயி சேவா நிலையத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ-18)

## ஒழுக்க நெறிக் கோவை தயாரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்காகவும் ஒழுக்க நெறிக்கோவை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கிரிக்கொத்தாவில் நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இந்த ஒழுக்க நெறிக் கோவை அங்கீகரிக்கப்பட்டது.

அரச கட்டுப்பாடுகளும் தேசிய பொறுப்பும், ஒழுக்க ரீதியான செயற்பாடுகளும் பழக்க வழக்கங்களும், தனிப்பட்ட இலாபங்களையும், சலுகைகளையும் நிராகரித்தல் போன்ற பல விடயங்கள் இக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (தி)


உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்




- பேரினவாதத்தின் எதிர்ப்பலையை எதிர் கொள்வாரா பிரதமர் -பவானி
- கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழு -ஜெயன்
- சொந்த மண்ணைப் பார்க்க வந்தவர்கள் வாகன விபத்தில் பலியான சோகம். -டொறிங்ரன்
- கருவிலே கலைந்து. போன ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி கூட்டு. -விதுரன்
- வியாசரின் பதில்கள்.
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்
Sankunatham
(08-14 செப் 2003)

# ஊடகத்துறைக்கு தனியான பீடம் அமைக்க வேண்டிய உதவிகளை வழங்குவோம்

## டென்மார்க் தூதுவர் யாழ்.பல்கலையில் உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

ஊடகத்துறைக்கென யாழ். பல்கலைக்கழகத்தில் தனியான பீடம் ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலுவாகவே நாம் உணர்ந்துள்ளோம். அறிஞர் பெருமக்கள் பலர் எமக்கு இது விடயத்தை உணர்த்தியுமுள்ளனர்.

மேற்படி பீடம் ஒன்று அமைப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க டென்மார்க் தயாராகவே உள்ளது.

யாழ்.குடாநாட்டில் இயங்கி வருகினற பத்திரிகை நிறுவனங்களுக்குக் கணனிகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றிய டென்மார்க்கின் இலங்கைக்கான தூதுவர் மைக்கல் ஸ்ரனபேர்க் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தலைமையில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய மைக்கல் ஸ்ரன் பேர்க்,

இலங்கையில் இன முரண்பாடு நீங்கி, இந்த நாட்டு மக்கள் ஆனந்தமாக வாழ வேண்டும் என்று டென்மார்க் விரும்புகிறது. தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்த்தெடுக்க ஆன பங்களிப்பை ஆற்றுவதே எமது குறிக்கோளாகும்.

நிரந்தர சமாதானம் மலர்வதற்கு ஊடகங்களின் பங்களிப்பு இன்றியமையாததது.

வடக்குத் தெற்குப் பாகுபாட்டை ஊடகங்கள் கட்டி வளர்க்கக்கூடாது. இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும்.

டென்மார்க் அரசாங்கம் உட்பட உலக நாடுகள் பலவும் யாழ். மாவட்டத்திற்கு பல்வேறு வழிகளிலும் உதவக்காத்திருக்கின்றன.

இருப்பினும்,எமது உதவிகள் வடக்குடன் நின்று விடாது தெற்கிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த வகையில் ஒலுவில் பிரதேசத்தில் 15கோடி டொலர் செலவில் அபிவிருத்தித்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தியுள்ளோம் என்றார்.

யுனஸ்கோவின் பத்திரிகைப் பயிற்சிநெறி இணைப்பாளர் எஸ். அருள் செல்வம் மற்றும் குடாநாட்டுப் பத்திரிகை நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் சிற்றி ஹோலுக்கு 10நவீன கணனிகளும் பத்திரிகை நிறுவனங்களுக்கு 8கணனிகளும் கையளிக்கப்பட்டன. (உ)



# மட்டு.விஜயம் செய்த நோர்வேத் தூதுவர் உண்மை நிலையை நேரில் பார்வையிட்டார்

(மட்டக்களப்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பீற்றர்சென் நேற்று முன்தினம் மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினரைச் சந்தித்த பீற்றர்சென்,அரச புலனாய்வுப் பிரிவினர் படுகொலை செய்யப்படும் சம்பவங்கள், போர்நிறுத்த மீறல்கள்,முஸ்லிம்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில்,மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.புண்ணிய மூர்த்தி, ஈ.பி.டி.பி. மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் பிரதீபன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் உள்ளூர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பினையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்குச் சென்ற நோர்வேத்தூதுவர் அங்கு நோர்வே உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதிப் புனரமைப்பு வேலைகளைப் பார்வையிட்ட பின்னர் கரடியனாறில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் வைத்து விசேட சிறப்புத்தளபதி கேணல் கருணாவைச் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பில், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பிரதிநிதிகள், பிராந்தியத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின்போது முஸ்லிம்களிடம் இருந்து தாம் எச்சந்தர்ப்பத்திலும் வரி அறவிடுவதில்லை என்பதையும் முஸ்லிம்களின் பாதுகாப்பு மற்றும் தமிழ்- முஸ்லிம் உறவுகளை வலுப்படுத்தல் போன்ற விடயங்களையும் பற்றி மிகத் தெளிவாக நோர்வேத் தூதுவருக்கு விளக்கிக் கூறியதாக மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார். (உ-62,10)

# பாதுகாப்புச் சபையைக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தைக் கூட்டி ஆராயுமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் இனந்தெரியாத நபர்களினால் தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களும், இராணுவப் புலனாய்வுப்பிரிவு உறுப்பினர்களும் சுட்டுக் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதனை, ஐக்கிய தேசிய முன்னணி அரசு கவனிக்காதது போல் இருந்து வருகிறது.

அத்துடன் அடிக்கடி இனவன்முறைகளும் இடம் பெற்று வருகின்றன. இது பாரிய அழிவுகளை ஏற்படுத்துவதற்குரிய அடித்தளமாக அமைந்துவிடும்.

இதனால், உடனடியாகப் பாதுகாப்புச் சபைக்கூட்டத்தைக் கூட்டி இது போன்ற கொலைகளையும் வன்முறைகளையும் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கட்சி தரப்பில் ஜே.வி.பி. சமர்ப்பித்துள்ள இந்த யோசனையை அரசாங்கத் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை யடுத்து அங்கு காரசாரமான விவாதம் இடம் பெற்றது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நாட்டில் தற்போது இல்லாத சமயத்தில் பாதுகாப்புச் சபைக கூட்டத்தைக் கூட்டுவது நடைமுறைக்குச் சாத்தியப்படாது என அரச தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (தி-63,10)

## இலங்கை வர்த்தகர்கள் குழு விரைவில் ஜேர்மன் விஜயம்

(கொழும்பு)

இலங்கை வர்த்தகர்கள் அடங்கிய குழுவொன்று ஜேர்மனுக்கு விஜயம் செய்யவுள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஜேர்மன் வர்த்தகப் பிரதிநிதிகள் அடங்கிய குழு இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் ஜேர்மனுக்கு விஜயம் செய்யுமாறு கேட்டிருந்தது.

அதற்கிணங்கவே வர்த்தகப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஜேர்மன் செல்லவுள்ளது.

1994 ஆம் ஆண்டின் பின்னர் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

## வதிவிடப் பயிற்சி நெறி

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைகளத்தால் நடாத்தப்படும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான அலுவலக நடைமுறைகள் தொடர்பான வதிவிடப்பயிற்சி நெறி இன்றும் நாளையும் உப்புவெளியில் உள்ள விடுதியில் நடைபெறவுள்ளதாக முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித்திணைக்களப் பணிப்பாளர் சி.கிருஷ்ணானந்தன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிக்கு வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 40 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-242)

## சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் உதைபந்தாட்டப் போட்டி

(கந்தரோடை)

சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப்போட்டிகள் யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி,யா/புனித ஹென்றியரசர் கல்லூரி ஆகியவற்றில் இடம்பெற்று வருகின்றன.

இரண்டாம் நாளான இன்றைய தினம் பி.ப.2.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு,

**14வயதின் கீழ்ப்பிரிவு**

நவாலி மகாவித்தி. எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா ஆர்.சி, மானிப்பாய்மெமோறியல் எதிர் பிரான்பற்று கலைமகள் வித்தி.

**16வயதின் கீழ்ப் பிரிவு**

பண்டத்தரிப்பு ஜசிந்தா ஆர்.சி. எதிர் மாதகல் சென்ற் யோசேப் வித்தி,சண்.இந்துக்கல்லூரி எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி, ஆனைக்கோட்டை ஆர்.சி.எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

**18வயதின் கீழ்ப்பிரிவு**

சண். இந்துக்கல்லூரி எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி,மானிப்பாய் மெமோறியல் எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி. (உ-103)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட சைவ சமயப் பொதுப் பரீட்சையில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா இன்று பி.ப. 3.00 மணிக்கு ஸ்ரீ அரசகேசரி விநாயகர் ஆலய மண்டபத்தில் சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில்,ஆசியுரையினை சிவஸ்ரீ கா.சாம்பசதாசிவக்குருக்கள், சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள் ஆகியோரும் வாழ்த்துரையினை யாழ். சிவதொண்டன் நிலையப் பொறுப்பாளர் சிவத்திரு ஸ்ரீ.அருணாசலம் செல்லத்துரை சுவாமிகளும், சிறப்புரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் சமஸ்கிருதத் துறைத் தலைவரும் பேராசிரியருமான வி.சிவசாமியும் நிகழ்த்தவுள்ளனர். (உ-8)

## பொன்சிவபாலனின் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

முன்னை நாள் யாழ். மாநகர சபையின் முதல்வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத் துறைச் செயலாளருமான அமரர் பொன் சிவபாலனின் 5வது ஆண்டு நினைவுதின நிகழ்வு இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்குத்தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

அதேசமயம்,கூட்டணியின் கொழும்புத் தலைமையகத்தில் இன்று காலை 9 மணிக்குக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இவரது நினைவு தின நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ-18)

## பாடசாலைகள் புனரமைப்பு

(வேலணை)

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருந்த தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளான வேலணை சரஸ்வதி வித்தியாசாலை ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஷ்பமகளிர் பாடசாலை என்பன மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இவ்விரு பாடசாலைகளும் புனரமைக்கப்படுவதுடன் மேற்படி பாடசாலைக்குத் தேவையான தளபாட மற்றும் கற்பித்தல் உபகரணங்களும் மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-47)



பரு.ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெற்ற உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பீ. விக்னேஸ்வரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாகிகள் பதவியேற்பு வைபவத்தில் கழகத்தின் புதிய தலைவர் பி.கதிரமலை, செயலாளர் என்.தங்கராஜா மற்றும் நிர்வாகிகள் டாக்டர் வி. யோகேஸ்வரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதைப்படத்தில் காணலாம். (படங்கள்: பரு. நிருபர்)


# அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்ட வீதி விபத்துகள்

## ஏனோ இந்தப்பாரா முகம் தமிழர்கள் என்பதால்தானோ?

யாழ்.நகர் மத்தியில் விபத்துக்கள் ஏற்படுவது ஓர் வழமையான நிகழ்வு போல் ஆகிவிட்டது. அதனைப் பெரிதுபடுத்தாது சகித்துக் கொள்ளும் தன்மையும் மக்களிடம் உருவாகிவருகிறது.

இவ்வாறு உயிராபத்துக்களை ஏற்படுத்தும் விபத்துக்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் இன்னமும் அசமந்தமாக இருந்து வருவது நகரத்தில் நடமாடும் மனித உயிர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமற்ற தன்மையை உருவாக்கி உள்ளது.

இந்த நிலையை உணர்ந்திருந்த போதிலும் மக்கள் நகர மத்தியில் நடமாடுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஏனெனில், யாழ்.நகரின் அமைப்பு முறை அவ்வாறு இருக்கின்றது. மிகவும் அத்தியாவசியத் தேவைகளுக்காக மக்கள்விரும்பியோ விரும்பாமலோ நகரினுள் பிரவேசிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.



வீதியை மறித்தால் விபத்துக்கள்ஏற்படத்தானேசெய்யும்

மக்களுக்குத் தேவையான வைத்தியவசதிகள்,பாடசாலைகள்,வர்த்தக நிலையங்கள், பேருந்து நிலையம், மற்றும் அரச செயலகங்கள் போன்ற மக்கள் நாடும் மையங்கள் மிகக் குறுகிய பரப்பளவையுடைய யாழ்.நகர மத்தியிலேயே அடக்கப்பட்டுள்ளன. பொதுமக்களில் ஏராளமானவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும்



சட்ட விதிகளை மீறும் வாகனங்கள்

இங்கு வந்து குவிகின்றனர். இதனால் வீதி நெருக்கடி அதிகரிப்பதுடன் விபத்துக்களுக்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன.

இந்த நிலைமையை மாற்றியமைக்கும் முயற்சியில் யாழ்.மாநகர சபையோ போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரோ மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அக்கறைகாட்டிக கொள்வதாகத் தெரியவில்லை. யாழ். நகரம் இலங்கையில் இரண்டாவது பெரியநகரம் என்பது மட்டு மன்றி வடபகுதியின் தலைநகரமாகவும் திகழ்கிறது.

## அதிகாரிகளேசற்று ஆலோசியுங்களேன்!

ஒரு நகரத்தின் வீதிகளிலும் சனநெரிசலைத்தவிர்ப்பதற்காக சமிக்ஞை விளக்குகள் மற்றும் வீதிக் குறியீடுகள் என்பன இருப்பது அவசியம். ஆனால், இவை எந்த அளவில் யாழ்.நகரில் அமைக்கப்பட்டுள்ளன என்று பார்த்தால்,மகிழ்ச்சிக்கு உரியதாய் இல்லை. இதைவிட யாழ்.நகரின் வீதிகள் சிலவற்றில் தந்தி இணைப்புக் குழல்களைப் புதைப்பதற்காகத் தோண்டப்பட்ட கிடங்குகள் இன்னும் சீராக மூடப்படாமல் இருக்கின்றன.

சில வீதிகளிலும் சந்திகளிலும் கழிவுநீர் வாய்க்கால்கள உடைந்து பேராபத்தை உருவாக்கும் வகையில் காணப்படுகின்றன.

இதைவிட,ஸ்ரான்லி வீதி,கே.கே.எஸ் வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி என்பவற்றில் வாகனச் சாரதிகள் வாகனங்களை வீதியோரங்களிலும், வீதியின் நடுப்பகுதிகளிலும் நிறுத்துவதாலும் வீதி நெருக்கடி அதிகரித்துள்ளது.

**செய்திக் கட்டுரை**

அத்துடன்,நகரின் நெருக்கடி மிக்க வீதிகளுக்கு மாற்றாகப் பயன்படுத்தக்கூடிய விக்ரோறியா வீதி மற்றும் மணிக்கூட்டு வீதி என்பவற்றைத் தடைசெய்து நகரின் அபிவிருத்திக்கு "நந்தியாக"சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் விடுதிகளில் படையினர் தங்கியிருப்பதால் ஏனைய வீதிகளை நெருக்கடிக்



விபத்துக்கு வழி சமைக்கும் குழிகளில் ஒன்று

குளளாக்கியுள்ளன.

இதன் முன்னணிக் காவல் அரண்களும் வீதியை அண்மித்து விஸ்தரணத்துடன் ஆரிய குளம் சந்தி,வேம்படிச் சந்தி மற்றும் மணிக்கூட்டுவீதிச் சந்தி ஆகியவற்றில் காணப்படுவதால் அவ்வீதிகள் வழிச்சுவட்டை பேண முடியாது வாகனங்கள் விபத்தை எதிர்நோக்கும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, யாழ் நகரின் மத்தியில் வீதி விபத்துக்களை உருவாக்கும் வகையில் அமையப் பெற்றிருக்கும் தடைகளை அகற்றுவது பற்றி அதிகாரிகள் ஆலோசிக்க வேண்டும். அத்துடன், நகரமத்தியில் நடமாடும் மக்களின் உயிர்களுக்கு உத்தரவாதத்தை ஏற்படுத்தும் வகையில்

## தடைகள் விலகினால் தன்னால் குறையும்

இவற்றைச் சீர்செய்வதற்கு யாழ். மாநகர சபையும் போக்கு வரவு கண்காணிப்புப் பொலிஸாரும் சேவைகளை விரிவுபடுத்தி ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்.

அதன்மூலம் அவசியத் தேவைகளுக்காக யாழ்.நகரை நாடிவரும் பல வேறுபட்ட மக்களது உயிர்களுக்கு ஆபத்து நேராது காப்பது சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளினதும் கடமையாகும்.

**க.பவன்**


# பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் பிரதேச செய்தியாளர்களாக கடமையாற்றுவதற்கான விண்ணப்பம் ஆண்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

- ★நயினாதீவு
- ★சரசாலை
- ★கொய்யாத்தோட்டம்
- ★கல்வியங்காடு
- ★மணற்கும்பான்
- ★ஓட்டுமடம்
- ★வல்வெட்டித்துறை
- ★புன்னாலைக்கட்டுவன்
- ★குப்பிளான்

இப்பதவிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்கள் தங்களது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில், தொழில் புரியும் இடம் என்பன உள்ளடங்கியதாக தயாரிக்கப் பட்ட விண்ணப்பங்களை;

பிரதம ஆசிரியர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு இம் மாதம்20-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.

வலம்புரி ஆளணி முகாமையாளர்


## மூவர் அடங்கிய திருடர் கும்பல் பிடிபட்டது

(வத்தளை)

களவுகள்,வாகனக்கடத்தல்கள்,ஹெரோயின் கடத்தல் போன்ற குற்றச் செயலகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் ஒரு கும்பலை வத்தளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து இரண்டுலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளையும் பொலிஸா கைப்பற்றியுள்ளனர்.

மூன்று பேர் அடங்கிய இந்தக்கும்பல் கிரான்பாஸ் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கடைகளில் நகைகள திருடுவதிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் கூறினர். அண்மையில் சிகரட்விற்பனையாளர்கள் பலரை இடைமறித்து பணம் அபகரிப்பிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

புலன்விசாரணைகள் தொடர்கின்றன. (பி)

## சர்வதேச முதியோர் வாரம் ஒக்.1முதல் அனுட்டானம்

(சுதுமலை)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை உள்ள காலப்பகுதியை சர்வதேச முதியோர் வாரமாக இலங்கையில் உள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் சகல பிரதேச செயலர்களிற்கும் உளளூராட்சி மன்ற தலைவர்களில்கிராமோதய சபைத் தலைவர்களிற்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முதியோர் நலன்பற்றிய அக்கறையையும் நலனையும் வெளிப்படுத்தும் பொருட்டும், சமூகத்தின் சகல மட்டங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் முதியோருக்கு கௌரவத்தையும் மரியாதையையும வழங்கும்-வகையிலும் பிரதேச மட்டத்தில் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவது அவசியம்.

அத்துடன், கடந்த காலங்களில் எமது பகுதிகளில் முதியோர் தொடர்பாக மேற்கண்ட ஆய்வின்,முதியோர் இல்லங்களில் வசிப்பதைவிட குடும்பச் சூழலில் தத்தம் உறவினர் மத்தியில் அன்பு ஆதரவுடன் வாழ்வதேயே முதியோர் அதிகம் விரும்புகிறார்கள் என்பதை அறிய முடிகின்றது.

எனவே,இக்கருத்தை மையமாகக் கொண்டு இளைய தலைமுறையின் மத்தியின் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாணவர்கள் மத்தியில் கவிதை,கட்டுரைப்போட்டிகள் நடாத்துவதற்கும் அவற்றில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களிற்கு பரிசில்களை வழங்குவதற்கும் ஏற்பாடுகளைச் செய்யுமாறும் அக்கடிதத்தில் தெரிவிககப்பட்டுள்ளது.

அத்துடன், இந்நிகழ்வுகளை சிறப்புற அமைப்பதற்கு ஒவ்வோர் பிரதேச செயலர்பிரிவுக்கும் தலா ஆயிரத்து 500ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

(உ-252)


அன்பு மாணவர்களே!
மிக விரைவில் எதிர் பாருங்கள்
உங்கள் வலம்புரியில்
குடாநாட்டின் முன்னணி ஆசிரியர்களால்
தயாரிக்கப்பட்ட கா.பொ.த (சாதாரண)
பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## இன்று ஒரு தகவல்

# பொறாமை

பொறாமை உணர்வு இருக்கின்றதல்லவா? அது மிகவும் மோசமானது. நாம் பொறாமைப்படவும் கூடாது. மற்றவர்கள் பொறாமைப்படுமாறு அதீதமாகவும் வாழக்கூடாது. என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

கிருபாநந்தவாரியார் இதனை விளக்க ஓர் அருமையான கதை கூறுவார். தனது சொற்பொழிவுகளுக்கிடையே சிறு கதைகளைக் கூறி நமது மனங்களில் ஆழமான கருத்துக்களைப் பதிய வைப்பார். அவர் கூறிய ஒரு கதையை நான் உங்களுக்குக் கூறுகின்றேன்!

ஒருவருக்கு பக்கத்து வீட்டுக்காரர் மேல் பொறாமை வந்து விட்டது. ஒருவர் நன்றாக வாழ்ந்தால் அதனைப் பார்த்து சந்தோசப்படவேண்டும் அல்லவா? அவர் நன்றாக பெரிய கல்வீடு கட்டி வாழ்ந்து வந்தார்! இவருக்கு அவரது வீட்டில் ஒரு சேதத்தை ஏற்படுத்தி விடவேண்டும் என்ற எண்ணம். இதனைத் தானே நேரடியாகச் செய்ய முடியாதே அதனால் என்ன செய்தார் என்றால் சமூகத்தில் இப்போது இது போன்ற தவறான காரியங்களைச் செய்வதற்கென்றே இருக்கின்றார்களல்லவா? அப்படியான ஒருவரிடம் சென்றார்!

போய் அந்த நபரிடம் ''ஒரு காரியம் செய்யவேண்டும். அதற்கு எவ்வளவு பணம் தரவேண்டும்?''என்று கேட்டு எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டார். அடியாளிடம்கூறினார் ''எனது பக்கத்து வீட்டை நீ தீவைத்துக் கொழுத்தி விடவேண்டும். அது மட்டும் தான் எனக்குத்தேவை என்றார்.'' ''அதற்கென்ன நிச்சயமாகச் செய்கின்றேன்'' என்று அவரும் வீட்டின் அடையாளம் தெருவின் பெயர் எல்லாம் கேட்டறிந்தார். பின்பு கூறினார்''தெருவை அடையாளம் காண்பது இலகு. வீடு காண்பது சிரமம்''என்றார். இவர் கூறினார் '' எனது வீட்டிற்கு முன்னால் உள்ள வீடு'' ''உங்கள் வீட்டிற்கு எதிர் வீடு என்றால் எப்படிக் கண்டு பிடிப்பது ஏதாவது ஒரு அடையாளம் கூறுங்கள். எனக்குக் காரியத்தை உடனடியாக முடித்துக் கொடுப்பது தான் பொழுது போக்கு. அதனால் உங்கள் தெருவிற்குள் நான் வந்தவுடன் எந்த வீட்டை நான் கொழுத்த வேண்டும் என்று அடையாளம் செய்து விடுங்கள்'' என்றார் அடியாள். ''என்ன அடையாளம்?'' என்றார் முதலாமவர். இவர் '' நான் ஒரு காகிதப் பூவைத் தருகின்றேன் நன்றாக இருட்டிய பின் எதிர் வீட்டுக் கதவில் செருகி விடவேண்டும். அந்த அடையாளத்தைப் பார்த்து நான் வேலையைச் செய்து விடுவேன்'' என்றார்.

இந்த ஏற்பாட்டின் படியே எல்லாம் நடந்தது. இவர் பூவை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தார். இவரது மனைவி கேட்டார்''என்ன அதிசயமாக இன்றைக்குப் பூவாங்கிக் கொண்டு வந்திருக்கின்றீர்கள்'' என்று இவர் கூறினார்.''இது சாதாரணப் பூஅல்ல ஒரு அற்புதமான பூ நமது எண்ணங்களை நிருபிக்கக்கூடிய பூ மிகவும் மந்திர சக்தி வாய்ந்தது'' என்று கூறிப் பூவை வைத்திருந்தார்.

பின் இருவரும் இரவு உணவை முடித்துக்கொண்டு படுத்து விட்டனர். நடுச்சாமத்தில் இவரது மனைவி எழுந்து சென்று பார்த்தார். பார்த்தால் எதிர் வீட்டு வாசலில் இந்தப் பூ இருக்கின்றது. உடனே கணவன் கூறியதை யோசித்துப் பார்த்தார்.'' இது ஓர் மந்திரப் பூ என்று கூறினாரே இதனால் நமக்கு நன்மை ஏற்படப்போகின்றது என்றும் கூறினார். இது நமது வீட்டில் இருப்பதற்குப் பதிலாக எதிர் வீட்டுக் கதவில் இருக்கின்றதே இது எப்படிச் சரியாக இருக்கும்'' என்று எண்ணிக் கொண்டு என்ன செய்தார் என்றால் அந்தப் பூவை எடுத்துக்கொண்டு வந்து தன் வீட்டுக்கதவில் வைத்தார். இதனை ஓர் மந்திரப் பூ என்று தானே இவர் நினைத்து விட்டார். அதனால் தன் வீட்டுக்கதவில் வைத்து விட்டு வந்து படுத்துவிட்டார்.

இந்த வீட்டிற்குத் தீ வைக்க வேண்டிய ஆள் தெருவிற்குள் வந்து விட்டான். அவனது ஒரே நோக்கம் என்ன வென்றால் பூ உள்ள வீட்டிற்குத் தீ வைப்பது தான். பூ எங்கே இருக்கின்றது என்று பார்த்துக்கொண்டே வந்தான். கடைசியில் இந்த வீட்டில் பூ இருந்தது. உடனே வீட்டிற்குத் தீவைத்து விட்டான். இப்போது எதிர் வீடு தீப்பிடித்து எரிவதற்குப் பதிலாக இந்த வீடு தீப்பிடித்து எரிய ஆரம்பித்து விட்டது.

அடுத்தவர்களை நாம் அழிக்க நினைத்தால் அது எப்படியாவது எம்மையே அழித்துவிடும். தன்வினை தன்னைச் சுடும் என்பது இது தான். இதனால் யார் மீதும் பொறாமைப் படாமல் எல்லாரும் நன்றாக இருககவேண்டும்என்று நினைத்து வாழ்ந்தால் இந்தச் சிக்கல் வராது. கிருபாநந்தவாரியார் மிக அற்புதமாக இந்தக் கதையைக் கூறுவார்.

இப்படித்தான் ஒருவர் டாக்டரிடம் வந்தார். ''டாக்டர் எனக்குக் கொஞ்ச நாளாக ஒரு பிரச்சினை உள்ளது. அதற்கு ஏதாவது மருந்து கொடுங்கள்'' என்றார். என்ன பிரச்சினை? என்றார் டாக்டர். ''வயிற்றெரிச்சலாய் இருக்கின்றது வயிறு மிகவும் எரிகிறது''என்றார். ''அப்படியா? எவ்வளவு நாளாக இந்த வயிற்றெரிச்சல்'' என்று கேட்டார் டாக்டர். ''ஒன்றுமில்லை! எனது எதிர் வீட்டுக்காரர் புதிதாக வீடு கட்டத் தொடங்கினார். அன்றிலிருந்து ஆரம்பமானது'' என்றார். டாக்டர் யோசித்தார். இது நோயினால் வந்த எரிச்சல் இல்லை பொறாமையால் வந்தது என்று நினைத்து விட்டு என்ன கூறினார்.'' இதற்கு மருந்து நான் கொடுக்க முடியாது மருந்து உங்களிடமே உள்ளது! நீங்கள் ஒரு வீட்டைக் கட்ட ஆரம்பித்தால் இந்த வயிற்றெரிச்சல் நீங்கிவிடும்'' என்றார்.

இளைசை எஸ்.சுந்தரம்

# போர் ஆரம்பித்தால் பொருளாதாரப் பாதிப்புகள் கடுமையாக இருக்கும்

## எச்சரிக்கிறது இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

முரண்பாட்டுக்கான தீர்வு ஒன்றிற்கான இணக்கம் காணப்படுவதற்கு முன்பே பொருளாதார வளர்ச்சிக்கான அனைத்துப் பெறுபேறுகளும் சாத்தியமாகியுள்ளன.

எனவே நிரந்தர சமாதானமொன்று மலரும் பட்சத்தில் இதை விட அதிகமான பொருளாதார நன்மைகள் கிட்டும்.

இதேவேளையில், சமாதானச் செயல முறையில் ஏதேனும் பின்னடைவுகள் தோன்றுமாயின் பொருளாதாரப பாதிப்புகள் மிகக் கடுமையானதாக அமையும் என்ற எச்சரிக்கையின் அடிப்படையில் நிரந்தர சமாதானத்தை எய்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் உறுதியுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்,

இரு தசாப்தங்களாக நிலவிய உள்நாட்டு யுத்தமானது மூலவளங்களின் செயற்திறனற்ற ஒதுக்கீடு, உற்பத்தியாக்க இழப்புக்கள், உட்கட்ட மைப்புக்களின் தகர்வு, அரசியல் உறுதிப்பாடின்மை மற்றும் மனித துயரங்கள் என்பவற்றினூடாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியைத் தடைப்படுத்தியது.

யுத்தத்தின் பாதகமான விளைவுகள் வடக்கு- கிழக்கு மட்டுமன்றி நாட்டின் அனைத்துப்பாகங்களிலும் சகல பொருளாதாரத் துறைகளிலும் உணரப்பட்டது.

சமாதான முயற்சி தொடக்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து உற்பத்தியாக்க நன்மைகள் புதிய சந்தைகளுக்கான வசதிகள் ஏற்படுத்தப் பட்டமை முதலீட்டாளர்கள் நம்பிக்கை மேம்பட்டமை மற்றும் நட்புச் சந்தைப் கொள்கை என்பவற்றினால் ஆதரவு வழங்கப்பட்டு உற்பத்தித் தொழில் மற்றும் மூலதனச் சந்தைகளுக்குப் புத்துயிர் ஊட்டப்பட்டது.

12 ஆண்டுகளின் பின்னர் ஏ-9 பாதை திறக்கப்பட்டமையானது பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது.

சுற்றுலாத் துறை 17 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், சுற்றுலாவில் இருந்தான பெறுகைகள் 16 சதவீதத்தினால் அதிகரித்துள்ளன.

பாதுகாப்புச் செலவுகள் கட்டுப் படுத்தப்பட்டமையினால் அரசிறைத் துறை நன்மை அடைந்துள்ளது. 2001ஆம் ஆண்டில் மொத்த உள் நாட்டு உற்பத்தியும் 4.8 வீதமாகக் காணப்பட்ட பொதுப் பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு என்பவற்றை உளடக்கிய பாதுகாபபுச் செலவு 2002 ஆம்ஆண்டில் 4.0 வீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

பெயரளவு நியதிகளில் சமாதானம் இல்லாத போது ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட செலவாகிய 100 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2002 ஆம் ஆண்டில் உண்மையான பாதுகாப்புச் செலவு 60 பில்லியனாக அமைந்துள்ளது என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (உ)

## இராசி பலன்

**11. 09. 2003**

**(ஆவணி 25, வியாழன்)**

**பிரதமை - மு. இ. 11.16 வரை**

**பூரட்டாதி - பி.ப. 5.42 வரை**

**இராகுகாலம் - 1.33 - 3.03**

**சுபநேரம் - 7.33- 9.03**

**மேடம்**
காரிய அலைச்சல், சுப செலவு, வாக்கு வன்மை, உறவினர் உதவி.

**இடபம்**
தொழில் லாபம், புகழ், எடுத்த காரியம் கைகூடும், தெய்வசிந்தை.

**மிதுனம்**
அதிகாரம், சகோதரர் உதவி, நல்ல முயற்சி, பிறருக்கு உதவுதல்.

**கடகம்**
தேசாந்திர வாசம், போசன சுகம், எடுத்த கருமங்கள் தாமதம்ாகும், அமைதிக்குறைவு.

**சிங்கம்**
நண்பர்கள் விரோதம், உடல் நலக் குறைவு, வாகன பயம், பிறருக்கு உதவுதல்.

**கன்னி**
செல்வாக்கு, அபு,ர்வ சந்திப்பு, பிரயாணம், முயற்சி கை கூடும்.

**துலாம்**
தேக நலன், மன மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, காரிய சித்தி.

**விருச்சிகம்**
தாழ்ந்த சுபா்வம், வியாபார நன்மை, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம்.

**தனுசு**
திடீர் நன்மை, ரோக நிலை, உறவினர் சந்திப்பு, பிரயாணம்.

**மகரம்**
பிறர் உதவி, காரிய நன்மை, தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி.

**கும்பம்**
கோபமான சம்பவம், வேலைக் கஷ்டம், புதிய செலவு, அதிக யோசனை.

**மீனம்**
தெய்வசிந்தை, வசீகரம், காரிய நன்மை, விருந்துபசாரம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## நியமனம்

(கொழும்பு)

பொலிஸ் விஷேட அதிரடிப் படையின் புதிய கட்டளையிடும் அதிகாரியாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் பெவிக்கே நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

1984 ஆண்டு முதல் பொலிஸ் விஷேட அதிரடிப்படையில் பல்வேறு பதவிகளை வகித்த இவர், வவுனியா உட்பட பல பிரதேசங்களில் கடமையாற்றி வருகிறார் எனபது குறிப்பிடததக்கது. (தி)

யாழ்ப்பாணம் தேசிய

# கல்வியியற் கல்லூரியின் கலாசுரபி வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை கல்லூரியின் வெளியீடான ''கலாசுரபி'' மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

அத்துடன், ஆரம்பக்கல்வி மன்றத்தின் ''ஆரம்ப அருவி'' செல்வி இ.மீராவின் ''தமிழின்பம்''ஆகிய கையெழுத்துச் சஞ்சிகைகளும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

கலாசுரபி சஞ்சிகையை பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் வெளியிட்டு வைக்க ஆய்வுரையை கோபபாய் ஆசிரிய கலாசாலை மூத்த விரிவுரையாளர் இ. மருதலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

ஆரம்ப அருவி சஞ்சிகையை உப பீடாதிபதி பா. தனபாலன் வெளியிட்டு வைக்க ஆய்வுரையை யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தன் நிகழ்த்தவுள்ளார்.

தமிழின்பம் சஞ்சிகையை கல்லூரியின் ஆசிரிய கல்வியாளர் இ.கமலநாதன் வெளியிட்டு வைக்க ஆய்வுரையை முகிழ்நிலை ஆசிரியர் செல்வி.த.கௌரி நிகழ்த்தவுள்ளார். (இ)

# இந்திய தகவல் தொழில்நுட்பக் குரு இலங்கைக்கு நான்கு நாள் விஜயம்

(கொழும்பு)

இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப குரு என்றும், ஆசியாவின் பில்கேட்ஸ் என்றும் அழைக்கப்படுகின்ற இன் வொசிஸ் நிறுவனத்தின் தலைவரான நாராயணமூர்த்தி இலங்கை வந்துள்ளார்.

உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கைத்தொழில் அமைச்சர் றோகித போகல்லாகம, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரைச் சந்தித்துள்ள இவர் தற்போது நாட்டில் நிலவும் சமாதானச் சூழலின் உச்சப்பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இதன் மூலம் வறிய மக்களின் கண்ணீரைத் துடைக்க முன் வருமாறும் இலங்கையின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்று வரும் யுக டெக்மா 2003எனும் கைத்தொழிற் கண்காட்சியின் 3ஆம் நாள் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய இவர்,

இலங்கையில், பொருளாதார முன்னேற்றத்தில் பிரமிக்கத்தக்க அளவு ஆர்வம் காட்டுகிறார்கள். ஆனால், துரிதமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்துறையை எதிர்கொள்ள இன்னும் பெரு முயற்சி எடுத்தல் வேண்டும். இந்நிலை இலங்கையில் விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

இன்வொசிஸ் நிறுவனம் 200 அமெரிக்க டொலர்களில் இருந்து தற்போது 6 பில்லியன் டொலர்களாக வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களை அதிகரித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் பொருந்தும் தற்கால சந்தையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதுமையான ஆலோசனைகளைக் கொண்டு வரக்கூடிய எவராயினும் எம்முடன் இணையலாம் என்று தெரிவித்துள்ளார். (உ-6)

# படுகொலைக்குப் பாவிக்கப்பட்ட துப்பாக்கிகள் சீனத்தயாரிப்புகள்

## உடத்தலவின்ன வழக்கு விசாரணையில் பகுப்பாய்வாளர்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உடத்தலவின்னப் படுகொலைகள் வழக்கு விசாரணையின் போது, தொடர்ந்தும் சாட்சியமளித்து வரும் அரசாங்கப் பகுப்பாய்வாளர் ஆராய்ச்சிக்கே தொன் காமினிசரத் குணதிலக பிரசன்னமாகி சாட்சியம் அளிக்கையில்,

நான் பகுப்பாய்வு செய்த 11 வெற்றுச் சன்னங்களையும் ரி-56 ரக வகைத் துப்பாக்கியிலும் பாவிக்க முடியும். இவை சீனாவில் தயாரிக்கப்பட்டவை. ரி-56 வகைத் துப்பாக்கியால் சுடும் பொழுது வெற்றுச் சன்னங்கள் தானாகவே வெளியில் வீசப்படும் என்று தெரிவித்தார்.

இப்படுகொலை விசாரணைகள் ட்ரயல் அட்பார் முறையில் நடைபெறுகின்றதும், முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த உட்பட 15 எதிரிகளும் பிணைமனுக் கோரிப் பல தடவைகள் தாக்கல் செய்த மனுக்கள் நிராகரிக்கப் பட்டதும் பின்னர் உயர்நீதி மன்றம் இவர்களுக்குப் பிணை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.
– குறள்

வலம்புரி

## யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பணி

யாழ்ப்பாண மண்ணில் தமிழர் தம் பாரம்பரியக் கலைத்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதில் யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்றத்தின் பங்கும் பணியும் போற்றுதற்குரியது. தமிழர்களின் அடையாளச் சினனமாக விளங்கும் கலைத்துவ அம்சங்களுக்கு உயிர் கொடுக்கும் கலா பீடமாக யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்றம் திகழ்கிறது. நிறுவனமயப்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாக இயங்குவதன் மூலம் தமிழர் தம் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு உயிர்ப்புக் கொடுக்கும் அம் மன்றத்தின் செயற்பாடுகள் காலம் உணர்ந்து செய்யும் பெரும் பணியாகும்.

பாரம்பரியக் கலைகள், எமது மண்ணில் இருந்து விலகலுக்கு உட்பட்டு விடுமோ என்று ஏங்கும் இதயங்களை ஆற்றுப்படுத்தும் நிலைக்களனாக விளங்கும் திருமறைக் கலாமன்றம் கலைத்துவம் மிக்க பல கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியது. கலைகள் என்பன வெறும் ரசனைக்கு மட்டும் உரியவை அல்ல, அவை மனித வாழ்வின் உன்னதத்தை-வாழ்க்கைத் தத்ரூபத்தை எடுத்துக் காட்டுவன. அவற்றை வெறும் ரசனை உணர்வோடு மட்டும் உள்வாங்காமல், அதற்குள் இருக்கக் கூடிய அற்புதத்தையும் சேர்த்து நுகரும் போதே அதன் தாக்கம் மனித வாழ்க்கையில் பிரணமிக்கின்றது.

அத்தகைய பிரணமிப்பை கலைத்துவ நெறிப்படுத்துகை மூலமே ஏற்படுத்த முடியும்இதன் வெளிப்பாடு கலைஞனினதும் அதனை உருவாக்கித் தருவோனினதும் ஆற்றுகைத் திறனிலேயே தங்கியுள்ளது.

அவ்வகையில் யாழ்ப்பாணத்தில் கலைத்துவத்தைப் பேணுவதற்கென்ற அர்ப்பணிப்புச் சிந்தையோடு இயங்கும் திருமறைக் கலாமன்றம் தனது இலக்கில் பூரண வெற்றியைக் கண்டுள்ளதெனில் அதில் மிகைப்படுத்தல் ஏதும் இருக்க நியாயமில்லை.

கலை அம்சங்களை தத்ரூபமாக வெளிப்படுத்தி அதன் மூலம் ரசனையாளர்களின் உள்ளங்களில் கனதியான சிந்தனை மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமைக்குரிய திருமறைக் கலாமன்றம் ''ஈழத்துக் கூத்து விழாவை'' நடத்துவது அதன் மற்றுமொரு தமிழ்ப் பாரம்பரியத்தின் கலை பேணும் பணியெனப் போற்றலாம்.

கலைத்துவ ஆற்றுகையோடு, கருத்தரங்குகளை வழங்கி ரசனையாளர்களின் மத்தியில் தெளிவைத்தரும் திருமறைக் கலாமன்றத்தின் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி தமிழ் உலகிற்கு அரும்பணியாற்றும் மன்றத்தின் தலைவர் அருட். திரு. மரியசேவியர் அடிகளார் மற்றும் மன்றத்தின் உயிர்த்துடிப்புள்ள கலைஞர்கள் அனைவரினதும் பணி மகத்துவமானது, பாராட்டுக்குரியது.

# தேசிய இன விடுதலையை விரும்பி நிற்கும் யாவரும் போற்ற வேண்டிய கவிஞன் பாரதி

''பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியடா-
அவன்
பாட்டை பண்ணோடு ஒருவன்
பாடினானடா''
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா-
அந்தக்
கறுகிறுப்பில் உளறும் மொழி பொறுப்பாயடா'' என்று பாரதியின் பாட்டுத் திறனை தனக்கே உரிய தனி நடையில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடுகின்றார். இவரை மிஞ்சுகின்ற அளவிற்கு பாரதியின் தாசனாக விளங்கிய பாரதிதாசன் பாரதியை பின்வரும் முறையில் உச்சிமீது உவந்து ஏற்றி பாடுகின்றார். இதோ அவருடைய



பாடல்.
''பைந்தமிழ்த் தேர்ப்பாகன் அவ
னொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத்
தந்தை
குவிக்கும் கவிதைக்குயில்! இந்
நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும்
கவிமுரசு!
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா''

முன்னே குறிப்பிட்ட கவிமணியை மிஞ்சுகின்ற அளவிற்கு பாரதியை நம் பாரதிதாசன் படம்பிடித்துக் காட்டுகின்ற பாங்கு எம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றது.

பாரதிதாசனைப்போல் பார்ப்பனீயத்தைச் சாடிய கவிஞன் தமிழகத்தில் வேறு எவரும் இல்லை. இருந்தாலும் பார்ப்பனன் குலத்தில் தோன்றிய பாரதிக்கு அவன் தாசனாக விளங்கினார். பார்ப்பனக் குலத்தில் பாரதி தோன்றினாலும் 'பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே' என்று பாடியவர் பாரதி. பார்ப்பனன் இருவர் பைந்தமிழ் பற்றுடையவர். ஒருவர் பாரதி மற்றையவர் சூரிய நாராயண சாத்திரி என்ற தன் இயற்பெயரை பரிதி மாற்கலைஞர் என்று மாற்றிய தமிழ் அறிஞர் எனவேதான் இருவர் மீதும் பாரதிதாசனுக்கு தனிப்பற்றும் பாசமும் இருந்தது.

1908முதல்- 1918வரையிலான 10ஆண்டு புதுச்சேரி வாழ்வுதான் பாரதியின் தலைமைப் படைப்புக்குரிய காலமாகும்.

### இராஜாஜி வாழ்த்திய பாரதி

மூதறிஞர் இராஜாஜியுடன் சில கருத்துக்களில் நாம் மாறுபடுவது உண்டு. ஆனால் அவர் நல்ல மதிப்பீட்டாளர் என்பதை ஒட்டி மாறுபட்ட கருததுக்கள் இருக்கமுடியாது. எனவே தான் அவர் பாரதியைப்பற்றி குறிப்பிடுகையில் பாரதி திலகர் யுக கவிஞா என்றும் இந்திய விடுதலை இயக்கத்தில் தன்னை அற்பணித்த மற்றைய கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையை காந்திஜியக் கவிஞர் என்றும் குறிப்பிட்டு சொல்கின்றார். இவரின் கருத்திற்கு நாம் ஆம் ஓதும் நிலையில் தான் இருக்கின்றோம். அதேவேளையில இவர்கள காலத்தில் வாழ்ந்த யோகி சுத்தானந்த பாரதியையோ, சுப்பிரமணியம் யோகி அவர்களையோ நாம் மறப்பதற்கு இல்லை. ஆனால் விடுதலை தவறி பாழ்பட்டுக்கிடந்த இந்திய சமுதாயத்திற்கு-தமிழ் சமுதாயத்திற்கு பாரதி ஊட்டிய எழுச்சியை வேறு எவரும் ஊட்டவில்லை. என்பது வரலாறு நடுநிலை நின்று வழங்குகின்ற தீர்ப்பாகும்.

### பாரதியும் இரவீந்திரநாத்தாகூரும்

பாரதியை இவ்விதம் உச்சிமீது வைத்து உவந்து போற்றுகின்ற போது வங்கபெருங்கவிஞன் இரவீந்திரநாத் தாகூரை நாம் மறப்பதற்கில்லை. அவரும் இந்திய விடுதலைக்காக குரல் எழுப்பியவா தான் ஆனால் பாரதிபோல் விடுதலை வேட்கைக்குப் பொதுமக்களை அவரால் தட்டியெழுப்ப முடியவில்லை. 1882இல் தோன்றி 1921ஆம் ஆண்டு தனது 39ஆவது வயதில் பாரதி தன் வாழ்வை முடித்துக் கொண்டார். இந்தியாவிற்கு விடுதலை கிடைத்தது 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15,ஆனால் 1921ல் அவர் மறைவதற்கு முன்பே 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே.

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே'' என்று எவ்வளவு முன் கூட்டிய உணர்வோடு இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கும் என்பதனை பாடிச் சென்றார் என்று எண்ணுகின்றபோது நாம் எப்படி அவருக்கு தலைசாய்த்து வணங்காமல் இருக்க முடியும்.

## இன்று பாரதியின் நினைவதினம்

### பாரதி முரண்பாட்டின் மொத்த வடிவம்

பாரதியைப்பற்றி பல ஆய்வுகள் எழுந்துள்ளன. அவரைப் பற்றி பல கருத்துக்கள் உள. பாரதியைக் கடவுள் என்று கருதுவோரும் உளா. பாரதியின் தேசிய விடுதலைப் பாடல்கள் குறித்த ஒரு காலத்தை மிஞ்சி வாழப்போவதில்லை என்று மதிப்பீடு செய்வோரும் சிலர். தமிழ் இலக்கண வரம்பை மீறுகின்ற அளவிற்கு ஆச்சே, போச்சே, என்று கொச்சை நடையை கையாண்ட குற்றத்தை பாரதிமீது சுமர்த்துவோரும் உள்ர்.

பாரதியாருடைய கவிதைகளும் உரைநடை நூல்களையும் ஊன்றிப் படிக்கின்ற பொழுது பல முரண்பாடுகளை நாம் காணத்தக்கதாக இருக்கின்றது. முரண்பாட்டின் மொத்த வடிவம் பாரதி என்று முட்டி மோதுவோரும் உள்ர். இவ்விதம் ஆயிரம் குறைபாடுகளை நாம் பாரதியிடம் கண்டாலும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதி என்பதை ஒட்டி எம்மிடையே மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.



'ஆயிரம் தெய்வம் உண்டு என்று அலையும் அறிவிலிகள் அறிவே தெய்வம் என்பதை அறியீரோ' என்று பாடிய பாரதி பராசக்தியைப் பற்றியும், மாரியம்மன் பற்றியும், பிளளையார் பற்றியும் , முருகன் பற்றியும, கண்ணனை வெவ்வேறு வடிவத்திலும் வருணித்த பாங்கினை நாம் எவ்விதம் [illegible]துரைப்பது என்ற கேள்விக்கு [illegible] கூறுவது என்பது சிக்கல் நி[illegible]ாகும்.

ஆனால் [illegible]கைய குறைபாடுகள், முரண்பாடுகள் வேறு புலவர்களிடம் இருந்தது என்பதை நாம் உணர்வது நலம். பாரதி இந்திய தேசியத்தைப் பற்றியா தமிழ்த் தேசியத்தைப்பற்றியா அதிகம் பாடினார் என்று எழுப்பப்படுகின்ற கேள்விக்கும் விடை கூறுவது கடினம் எனினும் தமிழத் தேசியத்தை மறவாத நிலையில் தான் இந்தியத் தேசியத்தை அவர் பாடினார். என்பதை நாம் இன்று நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

''செந்தமிழ் வாழ்க செந்தமிழ் நாடு
வாழ்க
பாரத மணித்திரு நாடு வாழ்க' என்ற அவருடைய பாடல்கள் பல இனிது முடிவுறுவதை நாம் காணலாம்.

### தமிழின் தகைமை உணர்ந்த பாரதி

'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று பன்மொழி அறிந்த நிலையில் தமிழின் பாங்கினை எடுத்துக்கூறிய பாரதி'. 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகைசெய்தல் வேண்டும' என்றும் பாடினான். அத்தோடு பிறநாட்டார் மதிக்கத்தக்க முறையில் திறமான இலக்கியங்களை நாம் படைத்தல் வேண்டும் என்று பாடிய பாரதி பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள். தமிழ்மொழியில் பெயர்தல் வேண்டும் என்றும் காலததின் கருத்தோட்ட வளர்ச்சிக்கு ஏற்ப தமிழை வளம்படுத்த விரும்பியவன் பாரதி' மெல்லத்தமிழ் இனிச்சாகும் என யாரோ ஒரு பேதை கூறிய கூற்றினைக் கேட்டு கொதித்து எழுந்த பாரதி. மேற்கில் மெத்தவளரும் விஞ்ஞானத்தை அறிவயலை- எம் தமிழில் ஆக்கி எம்மொழியில் வளம் காண முனைந்தார்

### பாரதியின் எல்லை மீறிய தமிழ்ப்பற்று

இந்திய ஒருமைப்பாட்டினை வலியுறுத்திப் பாடிய தலைசிறந்த பாடல் தான் 'சிந்துநதிக் கரையில் ஓடம் ஓட்டும்...' பாரதியின் பாடல். இப் பாடலில் மகாராஷடிரர் வீரம் பேசப் படுகின்றது. கங்கை நதியினை இணைக்க வேண்டும். வட இந்தியாவில் விளைகின்ற கோதுமையைக் கொண்டு வரவேண்டும் என்று பாடிய பாரதி சேரநாட்டு அழகிய பெண்களோடு கூடி சுந்தரத் தெலுங்கு பாடவிரும்பினார்.

இவ்விதம் இந்திய ஒருமைப்பாட்டினை ஓங்கி ஒலித்த பாரதி தன்னை மீறிய நிலையில் தமிழ் உணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு தமிழினை மிஞ்சுகின்ற மூளை படைத்தவனைத் தான் காணவிரும்பவில்லை என்றும தமிழுச்சியை மிஞ்சுகின்ற ஒருத்தி அழகாய் இருப்பதை தன்னால் தாங்க முடியாதென்றும் பாடினான். சிந்து நதிககரையிலே என்ற பாடலில் கேரளப்பெண்களுடன் சுந்தரத் தெலுங்கினை பாடவிரும்பிய பாரதி தமிழிசை,

**மா.க.ஈழவேந்தன்**

தமிழகத்தில் தாழ்ந்து போவதைக் கண்டு கொதித்து எழுந்தார்.

### தமிழிசையை வரவேற்ற பாரதி

'வாதாபி கணபதி ஜெயம் ஜெயம்' என்று வடமொழியில் நமது 'இசைக் கலைஞர்கள் தம் இசைநிகழ்ச்சியை தொடக்கி வைப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றார். இப்பாடலை விடாது கேட்கும் அளவுக்கு உங்கள் காதுகள் என்ன இரும்பா. அவ்வளவு மரதத்துப்போய் விட்டதா என்று கேட்டு ஏன தமிழன் தமிழில் பாட தயங்குகின்றான் என்று அன்று கேட்ட கேள்வி இன்றும் பொருள் பொதிந்த கேள்வியாக விளங்குகின்றது. ''பார்பபானை ஐயன் என்ற காலமும் போச்சே' என்று பார்ப்பனீயத்தை எள்ளிநகையாடிய பாரதி வட மொழி இசைக்கோ தெலுங்கு இசைக்கோ தமிழன் அடிபணிந்து அடிமையாகக் கூடாது என்றார். எம்மை எச்சரிக் கின்ற அவனின் எழுச்சிமிகு தன்மையினை எண்ணி எண்ணி இறுமாப்பு ஏய்துகின்றோம் இறும்பூதும் ஏய்துகின்றோம். □




சாயி அருளமுதம்

**வெற்றியின் இரகசியம்**

சாதனாவுக்கு கர்மேந்திரியங்களிலும் பார்க்க ஞானேந்திரியங்களே அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மற்றைய எல்லா உட்கருவிகளிலும் பார்க்க புத்தியே மிக முக்கியமானது. புத்தியை மனத்தின் எஜமானாக நீங்கள் அமைத்துக்கொண்டால் உங்களுக்குத் தோல்வி ஏற்படாது. புலன்கள் மனத்தை ஆளத் தொடங்கி விட்டால் மட்டுமே நீங்கள் தோல்வியடைவீர்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை


## 10 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு போலியோ சொட்டு மருந்து

(சுதுமலை)

எதிர்வரும் 20ஆம் திகதி யாழ். மாவட்டத்திலுள்ள சகல 10வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு போலியோ சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, மானிப்பாய், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 22நிலையங்களில் வைதது இச் சொட்டுமருந்து காலை 7மணிமுதல் மாலை 4மணிவரை வழங்கப்படவுள்ளதாகவும் பின்வரும் நிலையங்களிற்கு வருகைதந்து தவறாது இச் சொட்டுமருந்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஷ் வரராஜா அறிவித்துள்ளார்.

மானிப்பாய் லயன்ஸ் கழக அலுவலகம், சாவல்கட்டு ஆரம்ப சுகாதார நிலையம், சுதுமலை மத்திய சனசமூகநிலையம் (குண்டடி), நவர்லி வை.எம்.சி.ஏ, ஆனைக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையம்,7ஆம் கட்டை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சண்டிலிப்பாய் ஆலங்குழாய் சனசமூக நிலையம், பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலை, சில்லாலை கிராம அபிவிருத்திச்சங்கம், இளவாலை மத்திய மருந்தகம், சங்கானை அரசினர் வைத்தியசாலை, தொல்புரம் மத்திய மருந்தகம், வட்டு. தெற்கு திருஞானசம்பந்தர் பாடசாலை, சங்கரத்தை மாதர்சங்கம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, மாதகல் பிள்ளையார் கோவிலடி, சுழிபுரம் மாதர்சங்கம், அராலி இந்துக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், பண்ணாகம் ஆரம்ப சுகாதார நிலையம், வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை மத்திய மருந்தகம் ஆகியவற்றில் மானிப்பாய், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ளவர்களுக்கு சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது.

(உ-252)

# தியாகி லெப்.கேணல் திலீபனின் 16 ம் ஆண்டு நினைவு தினம்

## அனுஷ்டிக்க எற்பாடு

(திருநெல்வேலி)

லெப்.கேணல் தியாகி திலீபனின் 16 ஆம்ஆண்டு நினைவு தினத்தை குடாநாட்டில் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நினைவுதின ஆரம்ப நாளான எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பொது இடங்கள், வீதிகள் என்பன துப்பரவு செய்யப்பட்டு அலங்கரிக்கப்படவுள்ளன.

நினைவு நாட்களின் முதல் 9 நாட்களும் போட்டி நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் மற்றும் பிரதேச ரீதியாக சிரமதானம் என்பனவும் இறுதி மூன்று நாட்களும் அடையாள உண்ணாவிரத நிகழ்வும் இடம் பெறும்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் தீலிபனின் நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கான ஏற்பட்டுக்கூட்டம் கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் மறவன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

(த-43)

---

### நிதி உதவி...

பெறும் மாநாட்டில் பங்குபற்றுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், யப்பானியத் தூதரகம் அழைப்பு விடுத்திருந்தது.

எனினும் இம் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை கடிதம் மூலம் யப்பானியத் தூதரகத்திற்கு விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நிதி உதவி மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமைக்குரிய காரணங்கள் அக்கடிதத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களின் விருப்பத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை எடுக்க நேர்ந்தது. அக்காலப் பகுதியில் நிலவிய சூழ்நிலை இன்று வரை எந்த விதத்திலும் எந்த வகையிலும் மாற்றங்கள் ஏற்படாமல் இருப்பதாகவே விடுதலைப் புலிகள் கருதுகின்றனர். இதனால் இம் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம், மீள் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதிபற்றி அதனை வழங்கக் கூடிய உறுதியான அமைப்பு இல்லாமமையாலேயே தாம் இடைக்கால அலகைக் கோர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வகையான செயல்திறன்மிக்கதோர் இடைக்கால நிர்வாக அலகினால் மாத்திரமே நிதியினைப் பெற்றுப் பகிர்ந்தளித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனினும் இடைக்கால சபை இன்னமும் சாத்தியப்படாமலே இருந்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள அக் கடிதத்தில்.

இது தொடர்பான எமது தலைமைப் பீடத்தினது தெளிவான நிலைப்பாட்டை கிளிநொச்சியில் எதிர்வரும் 14-ம் திகதி நடைபெறவுள்ள யப்பானிய விஷேட தூதுவர் யசூசி அகாஷியுடனான சந்திப்பின்போது விளக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

---

### டென்மார்க்...

தொடர்பாகவும் இரு தரப்பினரும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இச் சந்திப்பை அடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் வேலைத் திட்டங்களையும் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை தூதுவர் மைக்கல் ஸ்ரன்பேர்க் இன்று முல்லைத்தீவுக்குச் சென்று அங்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிடவுள்ளதுடன் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வேலைத் திட்டங்களையும் பார்வையிட்ட பின் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு செல்லவுள்ளார்.

(ம)

---

# பொன்.சிவபாலன் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் அமரர் பொன் சிவபாலனின் 5ஆம் ஆண்டு நினைவு தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புத் தலைமைக் காரியாலயத்தில் இன்று வியாழக் கிழமை காலை 9.00 மணிக்கு கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தலைமையில் நடைபெறவுள்ளது.

(த)

---

### 2004 முதல்...

போதிக்க வேண்டும்.

அந்த வகையில் தமிழீழ வரலாற்றுடன் தொடர்பான துறைசார் பேராசிரியர்களின் துணையுடன் குடாநாட்டுப் பாடசாலை அதிபர்களுக்கு முதற்கட்டமாக கருத்தரங்குகளை ஏற்பாடு செய்யவுள்ளதாக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது. (த-43)

---

### பாசிக்குடா...

அம்மக்கள் முறைப்பாட்டில் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பொலிஸாரின் இந்த முகாம் அமைப்பு முயற்சியானது. பொது மக்களுக்கு மட்டுமல்ல. பாசிக்குடாவிற்குவரும் சுற்றுலாப் பிரயாணிகளுக்கும் இடையூறாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏற்கனவே பாசிக்குடாவிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கல்குடாவில், பொலிஸ் காவல் நிலையமொன்று புதிதாக அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு மேலதிகமாகவே தற்போது பாசிக்குடாவில் புதிய முகாம் அமைக்கப்பட்டுவருவதாக, மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

(இ)

---

### நாட்டில்...

நாட்டில் மீண்டும் போர் ஏற்பட விரும்புகின்றீர்களா? அல்லது அபிவிருத்தித் திட்டங்கள் நிறைந்த சமாதான சூழலை விரும்புகிறீர்களா? இவ்வாறு அமைச்சர் பீரிஸ் அருணலு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 250 வேலையாட்களுக்கு நியமனங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்;

வேலையற்றோர் பிரச்சினை

# திருமறைக் கலா மன்றத்தில் இன்று ஈழத்துக் கூத்து விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடாத்தும் ஈழத்துக் கூத்து விழா இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது. தொடர்ந்து நான்கு நாட்கள் பகல் இரவு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

இன்று முற்பகல் 9.30 மணிக்கு மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நிகழ்வுகள் மன்ற இயக்குனர் பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகளின் தொடக்க உரையுடன் ஆரம்பமாகின்றது.

நிகழ்வில் மன்னார் பிரதேசத்துக் கூத்து மரபுகள், மலையகப் பிரதேசத்து கூத்து மரபுகள் எனும் தலைப்பில் கருத்துரைகள் இடம் பெறவுள்ளது.

இரவு நிகழ்வுகளாக "அர்ச்சுனன் தபசு, கல்சுமந்த காவலர்கள் எனும் நாட்டுக் கூத்துக்கள் இடம் பெறவுள்ளன. (இ)

# உலக ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்கள் போராட்டம்

(திருநெல்வேலி)

உலக ஆசிரியர் தினமான ஒக்டோபர் 6ந் திகதி ஆசிரியர் தின நிகழ்வுகளைப் பகிஷ்கரித்து எதிர்ப்புப் போராட்டங்களை நீடாத்தவுள்ளதாக வடமாகாண இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் அ.பாலச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் ஆசிரியர்கள் பல்வேறு கெடுபிடிகளையும் நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றனர். இத்தகைய நெருக்கடிகளுக்கு எதிராக ஆசிரியர்கள் ஆசிரியர் தினத்தன்று குரல் எழுப்புவர் என்றும் அவர் தெரிவித்தார்.

(த-43)

---

### ஈழத் தமிழ்...

மற்றும் கடனட்டை மோசடிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று வருடங்களில் இடம் பெற்ற வன்முறைகளில் 10 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஈழத தமிழ் அகதிகள் 80 ஆயிரம் பேர் பிரிட்டனில் வாழ்கின்றபோதும் ஒரு சில பகுதிகளிலேயே இளைஞர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக 16 வயது தொடக்கம் 18 வயது வரையான இளைஞர்களே இவ்வாறு குழுக்களாகச் சேர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் இளைஞர்களின் குற்றச் செயல்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு நேற்று லண்டனில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபட்டஇளைஞர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட் ஒரு கைத்துப்பாக்கி, வாள்கள், கத்திகள், கோடரிகள், அரிவாள்கள் போன்ற ஆயுதங்கள் பத்திரிகையாளர்களுக்கு காண்பிக்கப்பட்டன.

தமிழ்க் குற்றக் கும்பல்களை இனங்காணவும், குற்றச் செயல்களுக்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கண்டறியவும் பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களை இனங்காண்பதற்கு அங்குள்ள தமிழ் மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கிவருவதாகவும் பொர்லிஸார் கூறுகின்றனர். (த)

# அதிபர்களுக்கான கூட்டம

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம், இன்று பிற்பகல் 3 மணிக்கு, யாழ். வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

இன்று ஆரம்பமாகின்றது
'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்'
திருமறைக் கலாமன்றம்

கால நிர்வாக அலகினால் மாத்திரமே நிதியினைப் பெற்றுப் பகிர்ந்தளித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனினும் இடைக்கால சபை இன்னமும் சாத்தியப்படாமலே இருந்து

நிலைப்பாட்டை கிளிநொச்சியில் எதிர்வரும் 14-ம் திகதி நடைபெற வுள்ள யப்பானிய விஷேட தூது வர் யசூசி அகாஷியுடனான சந்திப் பின்போது விளக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


❖ இன்று ஆரம்பமாகின்றது ❖

'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்'

திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

ஈழத்துக் கூத்து விழா

காலம் : 11,12,13,14 செப்ரெம்பர் 2003

(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

கருத்தரங்குகள்

இடம்:- மறைக்கல்வி நடு நிலைய மண்டபம்

நேரம்:- மு.ப. 9.30 - 5.30 மணிவரை

வெவ்வேறு பிரதேசக் கூத்து மரபுகள் தொடர் பான செயல் அறிக்கைகளுடன் இணைந்த கருத்த ரங்குகள் அந்தந்தப் பிரதேதச ஆய்வாளர்களால் நடத்தப்படும்.

* 11.09.2003 – மன்னார் பிரதேசக் கூத்து மரபு
  மலையகப் பிரதேசக் கூத்து மரபு
* 12.09.2003 – மட்டக்களப்பு பிரதேசக் கூத்து மரபு
  வன்னிப் பிரதேசக் கூத்து மரபு
  தமிழக தெருக் கூத்து மரபு
* 13.09.2003 – யாழ்ப்பாணப் பிரதேசக் கூத்து மரபு
* 14.09.2003 – தேசிய அரங்கை நோக்கிய கலந்தாய்வரங்கு

கூத்து அளிக்கைகள்

இடம்:- திருமறைக் கலாமன்ற அரங்கு

நேரம்:- மாலை 6.45 மணி

* 11.09.2003 – 'அர்ச்சுனன் தபசு' – மலையகம்
  (புதிய பண்பாட்டு அமைப்பு அளிக்கைக் குழு மலையகம்)
  'கல்சுமந்த காவலர்கள்' – வடபாங்கு–மன்னார்
  (குழந்தை செபமாலை குழுவினர், முருங்கன், மன்னார்)
* 12.09.2003 – 'காமன் கூத்து' – மலையகம்
  (புதிய பண்பாட்டு அமைப்பு அளிக்கைக் குழு மலையகம்)
  'கோவலன் கூத்து' – வன்னி
  (மணியம் குழுவினர் – முல்லைத்தீவு)
  'ஏகலைவன்' – தென்மோடி, யாழ்ப்பாணம்
  (திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்)
* 13.09.2003 – 'கீசகன் கதை' – வடமோடி, யாழ்ப்பாணம்
  (நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழு, வட்டுக்கோட்டை)
  'கம்பன் மகன்' – தென்மோடி, யாழ்ப்பாணம்
  (திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்)
* 14.09.2003 – 'காத்தவராயன்' – சிந்துநடை
  (நாட்டாரியற் கழகம், யாழ்ப்பாணம்)
  'இராவணேசன்' – வடமோடி, மட்டக்களப்பு
  (நுண்கலைத் துறை, கிழக்குப் பல்கலைக் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

[C/6632]


### நாட்டில்...

நாட்டில் மீண்டும் போர் ஏற்பட விரும்புகின்றீர்களா? அல்லது அபி விருத்தித் திட்டங்கள் நிறைந்த சமா தான சூழலை விரும்புகிறீர்களா? இவ்வாறு அமைச்சர் பீரிஸ் அருணலு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 250 வேலையாட்களுக்கு நியமனங் களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித் தார்.

அவர் மேலும் பேசுகையில்;

வேலையற்றோர் பிரச்சினை யைக் குறைக்கும் பொருட்டு அருணலு திட்டத்தின் கீழ் கஷ்டப் பிரதேசத் தைச் சேர்ந்த 10 ஆயிரம் பேருக்கு ஆடைக் கைத்தொழிற் துறையில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட வுள்ளன. தற்போதைய சமாதானச் சூழ்நிலை, காரணமாகவே அபிவி ருத்தித் திட்டங்களை ஏற்படு த்தமுடிகிறது. நாட்டிற்கு பெருமள வான உல்லாசப் பயணிகள் வரு கிறார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் நீடிக்கமாட்டாது. ஆகக் கூடி யளவு இரு மாதங்களே நீடிக்கும் என பல அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டி ருந்தன. ஆனால் பிரதமர் சகல சிக்கல்களையும் சமாளித்து இதனை 19 மாதங்கள் நிலைத் திருக்கச் செய்துள்ளார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நோர்வேத் தரப்பினர் உதவுகி றார்கள். இது போன்றதொரு சமா தான ஒப்பந்தம் 1995ல் ஏற்படுத் தப்பட்டு ஜனவரி 8முதல் ஏப்ரல் 19 வரையே நீடித்தது. அப் போது நோர்வே தரப்பினர் மத்தியஸ்தம் வகிக்கவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் தான் நாம் பாடசாலைகள், வைத்திய சாலைகள், வீதிகள், நீர்ப்பாசன, மின் திட்டங்கள், தொழில் வாய்ப் புக்களில் அபிவிருத்தியை ஏற்படுத் தியுள்ளோம் என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ)

லாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு நேற்று லண்டனில் நடை பெற்றது.

இந்த மாநாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபட்டஇளைஞர்களி டமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு கைத்துப்பாக்கி, வாள்கள், கத்திகள், கோடரிகள், அரிவாள் கள் போன்ற ஆயுதங்கள் பத்திரி கையாளர்களுக்கு காண்பிக் கப்பட்டன.

தமிழ்க் குற்றக் கும்பல்களை இனங்காணவும், குற்றச் செயல்க ளுக்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கண்டறியவும் பொலிஸார் தீவிர புலன் விசார ணைகளை மேற்கொண்டு வருகின் றனர்.

இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களை இனங்காண் பதற்கு அங்குள்ள தமிழ் மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கிவரு வதாகவும் பொலிஸார் கூறுகின்ற னர். (த)


பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

* பத்திரிகை விநியோகஸ்தர்கள்
  (சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும்)
* சிற்றூழியர்கள்

இரு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பவர்கள் யாழ்.நகர மையத்திலிருந்து 6 கி.மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களாக இருப்பது அவசியம்.

விருப்பமுடையோர் 13.09.2003 காலை 9.00 மணிக்கு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் நேரில் வரவும்

வலம்புரி
15, வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்

ஆளணி முகாமையாளர்



LOGIC
A/L DAY

R.S.சந்திரன

செவ் – 9 – 10
புதன் – 10 – 11
வெள் – 8 – 10

புகழ் கல்வி நிலையம்

சுதுமலைச் சந்தி, மானிப்பாய்

[7459]



பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்/கோப்பாய்க் கிறிஸ்த்துவக் கல்லூரி மாணவி
செல்வி

எட்வேட் அமிரா லக்ஸ்ஷாயினி



அவர்கள் யாழ். மறைமாவட்ட இளைஞர் ஆணைக் குழுவினால் நடாத்தப்பட்ட "மாணவர்களின் கல்வி நிலையில் பெற்றோரின் பங்கு" என்ற கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றதையிட்டு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

வாழ்த்துவோர்
அதிபர்,ஆசிரியர்கள்
மாணவர்கள்
கப்ரின் D.A.M.குணசிங்கம். J.P

[C/6633]



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.